

Mullil Pookal
முள்ளில் பூக்கள்

R.Rajini Beulah Shobika

ர.ரஜினிபியூலா ஷேரபிகா

முள்ளில் பூக்கள்

ர.ரஜினி பியூலா ஷோபிகா

TITLE OF THE BOOK	:	***Mullil Pookal***
புத்தகத்தலைப்பு	:	**முள்ளில் பூக்கள்**
AUTHOR	:	R. Rajini Beulah Shobika
ஆசிரியர்	:	**ர.ரஜினி பியூலா சோபிகா**
FIRST EDITION	:	2019
முதல் பதிப்பு	:	2019
PAGES/பக்கங்கள்	:	56
PRICE/விலை	:	100
ISBN NUMBER	:	978-93-5382-885-1
CONTACT NUMBER	:	9894748215

PUBLISHER : R. Rajini Beulah Shobika
(Imprint) 7/291, Petchimuthu Street
Nagamalai
Madurai -19
Tamil Nadu

PRINTER : R. Rajini Beulah Shobika
(Imprint) 7/291, Petchimuthu Street
Nagamalai
Madurai -19
Tamil Nadu

என்னுரை

அனைவருக்கும் வணக்கம். விளையாட்டு போல் எழுத்துப் பயணத்தை துவங்கிய நான் ஒரு புதினத்தை வெளியிடுவேன் என்று எதிர்பார்க்கவில்லை. என்னை வழிநடத்திய இறைவனுக்கு நன்றி. சமீப காலமாக, பேராசிரியர்கள் மாணவிகளிடம் முறைகேடாக நடந்து கொள்வது, அவர்களைத் தவறான பாதைக்கு அழைத்துச் செல்வது மற்றும் பெண்களுக்கு எதிரான குற்றங்கள் நாளுக்குநாள் அதிகரித்துக் கொண்டே இருப்பது போன்றவற்றைக் கண்ட என் மனம் இவைகளை நிறுத்த என்ன வழி என்று சிந்தித்தபோது உதித்த ஒரு பொறி தான் இவற்றை மையமாக வைத்து ஒரு நாவலை எழுதுவது என்பது. சமூகத்தின் நோய்களைக் களைய ஒரு எழுத்தாளரால் நிச்சயம் முடியும். வாள்முனையைவிட எழுதுகோலின் முனை வலிமை வாய்ந்தது என்பது மறுக்க முடியாத உண்மை. என் நாவலை வாசிக்கும் வாசகர்கள் மனதில் பெண்களுக்கு எதிரான வன்முறைகளை தடுக்க வேண்டும் என்ற எண்ணம் எழுந்தால், அதுவே எனக்குக் கிடைத்த மிகப்பெரிய வெற்றியாக கருதுகின்றேன்.

இத்தருணத்தில் நான் நன்றியோடு நினைவுகூரத்தக்கவர்கள் பலர். முதலாவதாக இப்புத்தகம் வெளிவர பெரிதும் உதவிபுரிந்த என் தாயாரின் நண்பர் பேராசிரியர் திரு.வினோத்குமார் அவர்களுக்கு நன்றிகளை உரித்தாக்குகின்றேன். தங்களது வேலைப்பளுவிற்கு மத்தியிலும், என் நூலை வாசித்து அணிந்துரை வழங்கி என்னை பெருமிதப்படுத்திய என் கல்லூரி முதல்வர் திரு. லெ. செந்தூர்பாண்டி ஐயாவிற்கும், தமிழ்த்துறைத் தலைவர் திரு. பொன். ஆ. சிவக்கொழுந்து ஐயாவிற்கும், எம்.கே.என்.எம். கலை மற்றும் அறிவியல் கல்லூரி முதல்வர் திரு.மு.காமராஜ் அவர்களுக்கும் என் நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவிக்கின்றேன். இந்நூலை அச்சிட்ட பதிப்பகத்தாருக்கும் என்னோடு துணைநின்ற என் உறவுகளுக்கும் நண்பர்களுக்கும் என் நன்றிகள் பல.

அன்புடன்,

ர.ரஜினி பியூலா ஷோபிகா

மதிப்புரை

டாக்டர் மு.காமராஜ், எம்.ஏ.(தமிழ்), எம்.ஏ.(பொருளியல்),எம்.ஏ.(சமூக அறிவியல்), எம்.ஏ.(சமயம்தத்துவம்), எம்.ஃ.பில், பிஎச்.டி, டி.ஜி.றி, டிப்ளமா இதழியல்.
முதல்வர்

எம்.கே.என்.எம்.கலை மற்றும் அறிவியல் கல்லூரி,

சில்லாங்குளம், ஒட்டப்பிடாரம் தாலுகா.

சமூகத்தின் மூலை முடுக்குகளில் ஒளிந்து கிடக்கும் உயிர்த்துடிப்புள்ள பிரச்சனைகளில் ஏதாவது ஒன்றை எடுத்து, வெளிப்படுத்தி, அதற்குப் பரிகாரம் காண முயல்வது எதுவோ அதுவே 'புதினம்' எனலாம். காரணம் துவண்டு போயிருக்கும் மனதைத் தூக்கி நிறுத்தும் வல்லமை புதினத்திற்கு உண்டு. அந்த வகையில் மாணவப் படைப்பாளர், உழைப்புத் தேனீ, முயற்சிக்கு எடுத்துக்காட்டாய் விளங்கும் 'முள்ளில் பூக்கள்' என்ற இந்தக் குறுநாவலின் ஆசிரியர் செல்வி ரஜினி பியூலா அவர்களை முதலாவது மனதாரப் பாராட்டுகிறேன்.

தன்னைச் சுற்றியுள்ள உலகின் சமுதாய அசைவுகளை ஒரு படைப்பாளன் எவ்வாறு நுட்பமாகக் கவனிக்கிறான் என்பதை வெளிப்படுத்தும் கருவியாகவும் உலகத்திற்கும் எதார்த்தத்தில் அதற்கு ஏற்படும் காயங்களுக்கும் இடையே உள்ள முரணை இக்குறுநாவல் அழகாகப் படம்பிடித்துக் காட்டுகிறது.

'முள்ளில் பூக்கள்' என்ற இக்குறுநாவல் 21 பகுதிகளாக அமைந்துள்ளது. கல்லூரி மாணவர்களின் வாழ்வியல் யதார்த்தத்தை மிக நுட்பமாக சித்திரிக்கும் நாவல் இது. எந்த மிகையும் இல்லாமல் எந்த மறைவும் இல்லாமல் நாவலின் போக்கு இயல்பாகச் செல்கிறது. தமிழுணர்வும், சமூக அக்கறையும் தமிழ்பண்பாடும் வார்த்தைகளிலும் வாக்கியங்களிலும் இழையோடிக் காணப்படுகிறது. அந்த வகையில் இது ஒரு நல்ல யதார்த்த நாவல் எனலாம்.

இந்த நாவலின் முதன்மைக் கதாபாத்திரங்களாக முதலாமாண்டு மாணவி மகிழினி, வகுப்புத் தோழி நவீனா, காவல்துறை ஆய்வாளர் வசந்த், வசந்தின் தாயார், உதவி ஆய்வாளர் அருண், ஏட்டு மங்களராஜ், பேராசிரியர் தேவராஜ் ஆகியோரை மையமிட்டே இயங்குகிறது.

எந்தச் சூழ்நிலையிலும் பெண்கள் தன்னம்பிக்கையையும் விடா முயற்சியையும் விட்டு விடக்கூடாது என்பதுடன், அழுகை என்பது கோழையின் செயல்பாடு, எனவே துணிந்து செயல்பட்டால், நீதியை நிலைநாட்டுவதோடு எடுத்த காரியத்தில் நிச்சயம் வெற்றி பெறலாம் என்பதற்கு எடுத்துக்காட்டாக மகிழினி என்ற தலைமைக் கதாபாத்திரம் ஆசிரியரால் படைத்துக் காட்டப்பட்டுள்ளது.

காவல்துறையில் அருண், மங்களராஜ் போன்ற ஒரு சில ஓநாய்கள் இருந்தாலும் கூட கடமை உணர்வும் மனிதநேயமும் கொண்ட காவல்துறை ஆய்வாளர் வசந்த் கண்ணியமிக்க காவல்துறையினர் சமுதாயத்தின் கண்களாக இருந்து கொண்டுதான் இருக்கிறார்கள் என்பதற்கு எடுத்துக்காட்டாய் விளங்குகிறார்.

தெய்வமாக விளங்க வேண்டிய ‘குரு’ பேராசிரியர் தேவராஜ் முரண்பாடுகளின் மொத்த உருவமாகத் திகழ்கிறார்.

‘தருமத்தின் வாழ்வதனைச் சூதுகவ்வும் தருமம் மறுபடியும் வெல்லும்’ என்ற வாசகத்தைப் போராடி மெய்ப்பித்துள்ளார் மாணவி மகிழினி.

இன்றைய சூழலில் கல்லூரி நட்பு சிலரிடம் எப்படி காணப்படுகிறது என்பதை வெளிப்படுத்தும் விதத்தில் நவீனா என்ற கதாபாத்திரம் நட்பைக் கொச்சைப்படுத்தும் குற்றவாளியாக ஆசிரியரால் காட்டப்பட்டுள்ளது.

தான் கண்டதை எழுதுவது தானா நாவல் என்று கேட்கலாம். நாவல் என்கிற போது அதன் கருவை, நணவோட்டத்தை மையப்படுத்தி கண்டதுமட்டுமின்றி காணாததையும் அதாவது தங்கத்துடன் செப்புச் சேர்ப்பது போல சேர்கின்றன. அவையே நாவலின் போக்கையும் இயங்கச் செய்துள்ளன.

வசந்த்தின் தாய், மகிழினியின் பெற்றோர், அண்ணன், மற்றும் லேப் டெக்னீஷியன், கல்லூரி முதல்வர், துறைத்தலைவர், தாளாளர் போன்ற கதாபாத்திரங்கள் ‘உப்பைப்போல’ அளவாகப் பங்களிப்புச் செய்துள்ளன. நாவலின் ஏற்றத்திற்குப் பெரும்பங்களிப்பும் செய்துள்ளன.

மனித சமுதாயத்தில் இன்னமும் ஜடமாகவும் முடமாகவும் இருக்கின்ற விகாரங்களை விவஸ்தை கெட்ட விஸ்வரூபங்களை அளந்து காட்டும் அடையாளச் சீட்டாக ‘முள்ளில் பூக்கள்’ என்ற இக்குறுநாவல் அமைந்துள்ளது.

ஆசிரியருடைய முதல் முன்னோடி முயற்சி சிறப்பாக அமைந்திருப்பதற்காக அவரைப் பாராட்டுகிறேன்.

> ‘‘மூச்சுவிடுபவன் எல்லாம் மனிதனல்ல
> முயற்சி செய்பவனே மனிதன்’’

என்ற வரிகளுக்கு விளக்கவுரையாய்த் திகழும் உழைப்புத் தேனீ, மாணவப் பருவத்தில் தன் உழைப்பால் படைப்பாசிரியராய் உயர்ந்த செல்வி ரஜனி பியூலா அவர்களை மனதாரப் பாராட்டுகிறேன்.

தொடர்ந்து நூல்கள் பல எழுதி சிறந்த படைப்பாளராக விளங்க வாழ்த்துகிறேன்.

உழைப்பிற்கு பாராட்டுக்கள்!

உயர்விற்கு வாழ்த்துக்கள்!

அணிந்துரை

முனைவர் லெ.செந்தூர்பாண்டி, முதல்வர்

செந்தாமரை கலை மற்றும் அறிவியல்கல்லூரி,

மதுரை.

இந்த படைப்பின் ஆசிரியர் எம் செந்தாமரை கல்லூரி ஆங்கிலத்துறை முதுகலை மாணவி செல்வி.ர.ரஜினி பியூலா ஷோபிகா அவர்கள் சிறந்த கலை ஆர்வம் உடையவர். பல்வேறு போட்டிகளில் கலந்து கொண்டு பரிசினைப் பெற்றுள்ளார் என்பது அனைவரும் அறிந்ததே. ஆனால் இவ்வளவு சிறப்பான ஒரு கதையினை புத்தக வடிவில் படைத்துள்ளார் என்பது மிகவும் வியக்கத்தக்க, பாராட்டப்பட வேண்டிய விஷயம்.

முள்ளில் பூக்கள் கதை ஒரு கல்லூரியில் படிக்கும் மாணவியின் கண்ணோட்டத்தையும், உணர்வுகளையும், மனக்கண்ணில் கொண்டு வந்து நிறுத்துகிறது. கதையின் கரு இக்காலங்களில் அநேக இடங்களில் நிகழும் சில நிகழ்வுகளின் அம்சமாக இருக்கிறது. இரண்டு வெவ்வேறு கதைகளை உருவாக்கி அவைகளை ஒரே இடத்தில் சந்திக்க வைத்து முடித்திருப்பது அருமை.

கதையின் வசன நடை எளிமை மற்றும் இனிமை, கதையின் நாயகி மகிழினி சந்திக்கும் பிரச்சினைகள் சமுதாயத்தில் பெரும்பாலான பெண்களின் பிரச்சனைகளாகவே பார்க்கப்படுகிறது. வசந்தனின் நேர்மையும் மகிழினியின் துணிச்சலும் இக்கால பெண்களுக்கும் இளைஞர்களுக்கும் ஒரு எடுத்துக்காட்டு.

இரு வெவ்வேறு கதைகளையும் நிறுத்தவேண்டிய இடமும் தொடங்கவேண்டிய இடமும் மிகவும் பொருத்தமாக உள்ளது. சொல்ல வேண்டியதை சுருங்கச் சொல்லி கதையை விருவிருப்பாக கொண்டு சென்றுள்ளார் கதையாசிரியர். தேவராஜ் மற்றும் அருண் ஆகியோரின் வில்லத்தனமும் சூழச்சியும் நம்பும்படியாக உள்ளது.

நல்ல கரு, பக்குவப்பட்ட எழுத்து, சிறந்த சமூக சிந்தனை, அருமையான வடிவமைப்பு, எளிமையான வசன நடை, படிக்கும் ஆர்வத்தை தூண்டும் கதை.

படைப்பாளியின் முதல் படைப்பாகவே தெரியவில்லை. தேர்ந்த எழுத்தாளரின் படைப்பினை போல உள்ளது.

வாழ்த்துக்கள்!

அணிந்துரை

முனைவர் பொன்.ஆ.சிவக்கொழுந்து,
தலைவர் தமிழ்த்துறை,
செந்தாமரை கலை அறிவியல் கல்லூரி,
மதுரை.

முள்ளில் பூக்கள் என்னும் நாவல் வாசகர்களின் மனதை கதையின் பின்னே அழைத்துச் செல்கிறது. இதனை நாவலாசிரியர் செவ்வனே செய்துள்ளார். 'மகிழினி' என்னும் பெயரைக் கொண்டுள்ள பெண், பெயருக்கு நேர்மறையாக நாவலில் பெரும்பங்கு இன்னலையே அனுபவித்துள்ளாள். இருப்பினும் மகிழினியின் மனவலிமை இன்றைய சூழலில் பெண்களுக்கு முன்னுதாரணமாகத் திகழ்கிறது. கல்வி நிலையங்களில் ஒருசில ஆசிரியர்கள் நன்னடத்தை இல்லாதவர்களாக இருக்கின்றனர் என்பதை 'தேவராஜ்' என்னும் பாத்திரப் படைப்பு வழியாக தெளிவுப்படுத்தப்பட்டுள்ளது. தேவராஜின் இறப்போடு மகிழினி கைது செய்யப்படுகிறாள். காவல் நிலையத்தில் அருண், மங்கள்ராஜ் ஆகிய காவலர்கள் மகிழினியிடம் முறைகேடாக நடக்க முற்பட்டவுடன், அவள் அங்கிருந்து தப்பித்து விபத்தில் சிக்கினாள் என்பது வழியாகக் காவல்துறையில் சில புள்ளுருவிகள் உள்ளனர் என்பதும் இந்நாவலில் சுட்டப்படுகிறது. கடமை தவறாத நேர்மையான காவல்துறை அதிகாரிகளால் இந்த உலகம் நீதியோடு இயங்குகிறது என்பதற்குச் சான்றாக 'வசந்த்' என்னும் கடமையுள்ளம் கொண்ட பாத்திரத்தைப் படைத்து மகிழினிக்கு நீதி கிடைக்கச் செய்திருக்கும் பாங்கு அற்புதம்.

இன்றைய காலகட்டத்தில் 'முள்ளில் பூக்கள்' என்னும் நாவல் வெளிவந்துள்ளது, தமிழ் இலக்கிய உலகின் புதுவரவாக அமைந்துள்ளது. நாவலாசிரியர் செல்வி.ரஜினி பியூலா நல்ல திறமைமிக்கவர். வகுப்பறையில் ஆசிரியர் கூறுவனவற்றை உற்றுநோக்கிக் கற்று, அதனை அப்படியே அடிபிறழாமல் சொல்லும் திறன் கொண்டவர். இவர் எடுத்த குறிக்கோளை எளிதில் அடையும் ஆற்றல் மிக்கவர். என்னுடைய அனுபவத்தில் இவரைப் போன்ற கல்வித் திறன் கொண்ட மாணவியை நான் கண்டதில்லை. இவரின் முதல் முயற்சியே உன்னதமாக இருக்கிறது. இவரின் அறிவுக்கும் ஆற்றலுக்கும் விருதுகள் பல பெறுவார் என்று கூறி வாழ்த்துகிறேன். வாழ்க பல்லாண்டு... வளர்க நும் இலக்கியப்பணி...

1

வண்ண மலர்கள் பூத்துக் குலுங்கும் பூஞ்சோலையின் நடுவே அன்றலர்ந்த மலர் போல் நின்று கொண்டிருந்தாள் மகிழினி. தன்னை யாரோ அழைப்பது கேட்டு குரல் வந்த திசை நோக்கித் திரும்பினாள். எதிரே நவீனா நின்றிருந்தாள்.

'உன்ன, எவ்வளவு நேரம் கூப்பிடுறது, மகிழினி?"

'ஏன், என்னாச்சு நவீனா?"

'உன்ன ஹெச். ஓ.டி கூப்பிடுறார்."

கேட்டவுடன் 'சுர்" என்றது மகிழினிக்கு.

"இந்த ஹெச்.ஓ.டிக்கு என்ன தான் வேணுமாம். எப்ப பாத்தாலும் என்னயவே சொல்லிட்டு, சே" என்று நினைத்தபடியே,

'எங்க இருக்காங்க?" என்றாள்.

'டிபார்ட்மெண்ட்ல."

முனங்கியபடியே சென்றாள். "ப்ரொ.ஃ.பஸர்ங்கிறது எவ்வளவு உயரிய தொழில் அதுல போய் ஏன் தான் இப்படி இருக்குறாங்களோ" அதற்குள் துறையை அடைந்தாள்.

'எக்ஸ்கியூஸ் மீ சார்."

துறைத்தலைவர் முறைத்தபடியே,

'எதுக்கு தேவ்ராஜ் சார் க்ளாஸ விட்டு வெளிய போன? அவ்வளவு தைரியமா? ஆர் யு த ப்ரின்சிபல்? என்ன நினைச்சிட்டுருக்க?"

'என்ன இப்டி கத்துறார்" மனதுக்குள் எண்ணியபடியே,

'அன்னிக்கி என்ன நடந்துச்சுன்னா சார்?"

அவளை முடிக்கவிடவில்லை.

'எதுத்து பேசுறியா? அடுத்து இனிமே நேரா பிரின்சிபல்ட்ட தான் போய் நிப்ப"

'சார்" பதறினாள்.

'கெட் அவுட்."

உறைந்து போய் நின்றாள்.

‘சொன்னது காதுல விழல?”

வெளியேறினாள்.

“இந்தப் பிரச்சனை சரியாகவே ஆகாது போல. இப்ப முதல் வருஷம் தான் முடிஞ்சிருக்கு. இன்னும் மிச்சவருஷத்த எப்படி படிக்கிறது? ஒருத்தரோட வாழ்க்கையில முக்கியமான காலகட்டம்ங்கிறது 18-28 வயசு பருவம்தான். இந்த நேரத்துலதான் நம்ம உயர்கல்விய தேர்ந்தெடுக்கிறோம். ஜாப் செலக்ட் பண்றோம். நம்ம லை.ஃப் பார்ட்னரைக் கூட இப்போ தான் முடிவு பண்றோம். இந்த நேரத்துல ப்ரொ.ஃபசர்ஸ் மாணவர்களுக்கு நல்லதொரு கைடா ஒரு மென்ட்டரா இருக்கனும். குறைந்தபட்சம் உபத்திரவம் பண்ணாமலாவது இருக்கனும்.” சிந்தித்தபடியே நடந்து வந்தவள் ஒரு மரத்தடியில் அமர்ந்தாள். நவீனாவும் வந்து சேர்ந்தாள்.

“ஏய் டிபார்மெண்ட்ல என்னடி ஆச்சு? ஏன் உம்முனு இருக்க?”

“வழக்கம் போலத்தான் திட்டு வாங்கி வந்து சேர்ந்திருக்கேன்.”

“நீ ஏன் அன்னிக்கி எந்திருச்சு வெளியபோன?”

“யோசிச்சுப்பாருடி. அன்னிக்கி க்ளாஸா நடந்துச்சு? இது அதோட ஜாய்னாச்சுன்னு சொல்ல முடியாதா? இது அது மேல ஆசை கொண்டுச்சுங்கறார். அதுக்கு மேலயும் பேசுறார்”.

“வேற வழியில்ல. என்ன செய்ய சொல்ற? நாம இந்த பாடம் எடுத்தாச்சு, இத கம்ப்ளீட் பண்ணித்தான் ஆகனும்.”

“அது வரைக்கும் சகிச்சிக்கிட்டே போகச் சொல்றியா? என்னால முடியாது”. இடைமறித்தாள் மகிழினி.

“நான் சொல்ல வர்றத முழுசா கேள். ஒரு வாரத்துக்கு ரெண்டு மணி நேரம் தான, என்னத்தையோ பேசிட்டு போட்டுமே.”

“எல்லோரும் .ஃபெயில் ஆவோம்ங்கிறியா?”

“இதுக்கு எனக்கு என்ன சொல்றதுன்னு தெரியல”.

“ஹெச் ஓ.டிக்கிட்ட சொன்னா அவர் அத கண்டுக்கவே இல்ல”

“அதெல்லாம் கண்டுக்க மாட்டாங்க. சரி இதையே பேசினா டென்ஷன் தான் ஆகும். வீட்டுக்கு கிளம்பலாம் வா.”

அசையாமல் அமர்ந்திருந்தாள் மகிழினி.

‘கிளம்பலாம் வா’’, நவீனா அவள் கையைப் பிடித்து அழைத்தாள்.

அரைமனதோடு கிளம்பினாள் மகிழினி.

2

உச்சிவேளை.

“இவன இன்னிக்கு எப்படியாவது பிடிச்சே ஆகனும். என்ன செய்றது?”

தலை வெடித்துவிடும் போல் இருந்தது வசந்துக்கு.

“இந்த ஏரியாவ விட்டு அவன் தப்பிக்கிறதுக்குள்ள பிடிக்கனும். அவன்கிட்ட இருந்து வந்த போன் கால்ல ட்ரேஸ் பண்ணினதில இந்த இடத்தக் காண்பிச்சுது”, நினைத்துக் கொண்டே திரும்பினான். ஒரு ஆள் பதுங்குவது தெரிந்தது. கூர்ந்து கவனித்தான்.

‘அவனா இருப்பானா…..’

உருவம் மறையத் தொடங்கியது.

வேகமாக அந்த இடத்தை நோக்கிச் சென்றான். சந்துக்குள் நுழைந்தான் அந்த ஆள் ஓடத் தொடங்கினான். வசந்த் துரத்திக் கொண்டு ஓடினான். அவன் தன் கைப்பேசியைத் தூக்கிப் போட்டு விட்டு ஓடினான்.

‘டேய்! நில்லுடா, டேய்! ….’

முட்டுச்சந்து.

அவனால் நகர முடியவில்லை. திரும்பி நின்றான். வேகமாக இடித்துத் தள்ளினான். வசந்த் தாக்குப்பிடித்து நின்றான்.

ஒருவரையொருவர் முட்டித் தள்ளினர். இறுதியில் அவன் திமிறி ஓடி விட்டான். வசந்த் புன்னகைத்தான்.

“ஹலோ கன்ட்ரோல் ரூம், நான் சொல்ற நம்பர ட்ராக் பண்ணி எனக்கு அப்டேட் பண்ணுங்க” என்றான். அவர்கள் சொன்ன வழிப்படி சென்றான். ஒரு அடுக்குமாடி குடியிருப்புக்கு வந்து சேர்ந்தான்.

“இந்த அபாட்மென்ட்ல எப்படியும் நூத்தம்பது வீடாவது இருக்கும். ஒவ்வொரு வீடா ஏறி இறங்க முடியாது” சிந்தித்தவன்,

“கான்ஸ்டபிள்ஸ், நீங்க பின் வாசலுக்குப் போங்க, எல்லாக் கதவையும் மூடுங்க”. எதிரே வந்தவரிடம்,

“இந்த அபார்ட்மெண்ட்ல அசோசியேஷன் ஹெட்னு யாராவது இருக்காங்களா?”

“ஆமாம் சார்.”

“எங்கே இருக்கார்?”

“அதோ அங்கே தான்.”

ஒரு வீட்டிற்குக் கூட்டிச் சென்றார்.

“நீங்க தான் அசோசியேஷன் ஹெட்டா? ”

“ஆமாம் சார்.”

“இந்த ஆளைப் பாத்திருக்கீங்களா?”

கைப்பேசியில் இருந்த புகைப்படத்தைக் காண்பித்தான்.

“இல்லை சார்.”

“இவன் ஒரு தேடப்படும் குற்றவாளி. இந்த அபார்ட்மெண்ட்ல தான் வந்து நுழைஞ்சிருக்கான். ரெசிடண்ட்ஸ் எல்லாருக்கும் வாட்ஸப் க்ரூப் ஏதாவது இருக்கா?”

‘இருக்கு சார்.”

‘இந்தப் போட்டோவ ஷேர் பண்ணி அலெர்ட் பண்ணுங்க.”

‘இந்தா பண்றேன் சார்.”

“க்விக் இங்க சிசிடிவி கேமரா?”

“முதல் மாடில.”

முதல் மாடிக்கு விரைந்தான்.

“எண்ட்ரன்ஸ்.ஃபுட்டேஜ் காமிங்க”.

“சார்! கீழ வரான் சார்”, ஏட்டு அலறினார்.

அதற்குள் அனைவரும் அவனைப் பிடிக்க ஓடினர். ஒருத்தர் கட்டையை எடுத்து அவன் மீது எறிந்தார். சரியாகக் காலில் பட்டு குப்புற விழுந்தான்.

வசந்த் அவன் கழுத்தைச் சுற்றி வளைத்து பிடித்து, கீழே தள்ளி அடிக்க ஆரம்பித்தான். பத்து, இருபது அடிகளுக்குப் பின், “என்ன, செல்போன தூக்கிப் போட்டுட்டா பிடிக்க முடியாதுன்னு நினைச்சியா? நீ இந்த அபார்ட்மெண்ட்ல தான் இருக்கனு கண்டுபிடிக்க முடியாதா? இனிமே நீ தப்ப முடியாதுடா.”

அவனிடமிருந்து ஒரு பதிலுமில்லை.

“உனக்கும் எனக்கும் தள்ளுமுள்ளு நடந்தப்போ உன் பேக்ல என் செல்லப் போட்டுட்டு தான் உன்னத் தப்பிக்க விட்டேன். என் செல்போன ட்ராக் பண்ணி வந்து பிடிச்சுட்டேன். அது சரி, பொண்ணுங்கனா அவ்வளவு இளக்காரமா? ∴போன் பண்ணி மிரட்டிட்டு இருக்க. அவ்வளவு திமிரா உனக்கு?”

அவன் பையில் இருந்து தன் கைப் பேசியை எடுத்துக்கொண்டான்

“கான்ஸ்டபிள், இவன ஜீப்ல ஏத்துங்க”.

சுற்றி நின்றவர்களைப் பார்த்து, “தேங்ஸ் ∴பார் யுவர் கோஆபரேஷன்” என்றான்.

“இருக்கட்டும் சார். உங்களுக்கு உதவுறது எங்க கடமை”. பலர் கூட்டமாக வாழ்த்தினர். வெற்றிக் களிப்போடு வெளியேறினான் வசந்த்.

3

மதியவேளை.

வகுப்புகள் ஆரம்பிப்பதற்கான மணி ஒலித்தது. மாணவ, மாணவிகள் இடையே ஒரே ஆரவாரம். புத்தகத்தைப் படித்துக் கொண்டிருந்த மகிழினியை ஒரு அடி அடித்தாள் தீபா.

‘‘ஏன்டி அடிச்ச? ’’

‘‘எப்ப பாத்தாலும் படிச்சிட்டு எங்களோடயெல்லாம் பேசு’’.

‘‘சரி என்ன பேச?’’

‘‘அதுவா….’’ சன்னல் பக்கம் திரும்பியவள்,

‘‘ஐயையோ, தமிழ் சார் பேப்பரோட வாறாரே’’ கூச்சலிட்டாள்.

மகிழினிக்கும் பதற்றம் தொற்றிக்கொண்டது.

தமிழ்ப் பேராசிரியர் உள்ளே நுழைந்தார்.

‘‘வணக்கம் ஐயா.’’

மாணவமணிகள் கூட்டமாக வணங்கினர். வந்து விடைத்தாள்களை எல்லாம் மேசை மீது வைத்தவர், கோபத்துடன்,

‘‘என்ன பரீச்சை எழுதியிருக்கீங்க எல்லாரும்? பேப்பர்ல ஒன்னும் கிடையாது. நடத்தறதெல்லாம் வேஸ்ட். வாசிச்சு திருத்தினா எனக்கு தமிழ் மறந்துடும். எல்லாம் வரிசையா வந்து பேப்பர வாங்குங்க’’.

ஒவ்வொருத்தர் பெயராக வாசித்துக் கொடுத்தார். சிலருக்கு விடைத்தாள் பறந்து வந்து சேர்ந்தது. பலர் திட்டுவாங்கினர்.

‘‘டேய் ரமேஷ், ஒரு மார்க் கூட என்னால போட முடியல, அவ்வளவு கேவலமா எழுதியிருக்க.’’

அவனோ பாராட்டு கிடைத்ததைப் போல குலுங்கி குலுங்கிச் சிரித்தான்.

‘‘எப்படியோ போ’’ சலித்துக் கொண்டார் ஆசிரியர்.

மகிழினியோ தன் பெயர் எப்பொழுது வரும் என்று எதிர்பார்த்திருந்தாள்.

‘‘மகிழினி’’

வேகமாக எழுந்து போனாள்.

‘‘நல்லா எழுதியிருக்கமா, மிக்க நன்று’’,

‘‘நன்றிங்கய்யா’’.

விடைத்தாளை வாங்கிக் கொண்டு தன் இருப்பிடம் வந்து சேர்ந்தாள்.

‘‘இலக்கணம் எல்லாம் சரியா எழுதியிருக்காங்க. அவ்வளவு மேற்கோள் காமிச்சிருக்காங்க. எல்லோருக்கும் ஒரே மாதிரிதான் நான் நடத்துனேன். மிச்சவங்களுக்கெல்லாம் என்னாச்சு?’’

விடைத்தாளைப் பிரித்து ஒவ்வொரு பக்கமாகப் பார்த்தாள் மகிழினி.

‘‘எப்படி இவ்வளவு நல்லா படிக்கிற? ’’, வினவினாள் ரேகா.

‘‘தமிழ் எனக்கு எப்பவுமே நல்லா வரும். ஆர்வத்தோட படிச்சா எல்லாமே ஈஸிதான்.’’

‘‘நீ டீவியெல்லாம் பார்க்க மாட்டியா? ’’, இது தீபாவின் கேள்வி.

‘‘கொஞ்சம் பார்ப்பேன்’’.

‘‘நியூஸ் மட்டும் பார்ப்ப. சீரியலெல்லாம் பார்க்க மாட்ட கரெக்டா?’’

‘‘இல்ல சில நிகழ்ச்சிகள் பார்ப்பேன்’’

‘‘என்னமோ போடி, எங்களுக்கெல்லாம் ஒன்னும் ஏற மாட்டேங்குது’’, அலுத்துக் கொண்டாள் நவீனா.

‘‘அதுக்கு ஏன் கவலைப்படற? எது புரியலன்னு சொல்லு நான் சொல்லிக் கொடுக்குறேன். எப்பனாலும் எனக்கு ஃபோன் பண்ணு.’’

‘‘ரொம்ப தேங்ஸ்டி.’’

நண்பர்களின் உரையாடலுடன் வகுப்பு இனிமையாக நிறைவுற்றது.

4

“யூ ஹெவ் டன் எ வொண்டர்∴புல் ஜாப், வசந்த்.” கம்பீரக் குரலில் பாராட்டினார் காவல்துறை உதவி ஆணையாளர். வசந்துக்கு மேலெல்லாம் புல்லரித்தது. மெய்சிலிர்க்க, “தேங்க் யூ சார்” என்றான்.

“ரொம்ப நாளா நமக்கு ஆட்டம் காம்பிச்சிட்டிருந்தவன எப்படி பிடிச்சீங்க? அதுவும் இவ்வளவு சீக்கிரமா?”

“சார், அவன் அந்தப் பொண்ணுகிட்ட பேசின நம்பர ட்ராக் பண்ணப்ப காமிச்ச இடத்துக்கு உடனே ரஷ் அப் பண்ணேன். அங்கே அவனத் தற்செயலாப் பார்த்தேன். அவனப் பிடிக்க முயற்சி செஞ்சப்போ அவன் பேக்ல என் செல்போன போட்டுட்டேன். பின் அத ட்ராக் பண்ணி அபார்ட்மெண்ட்க்கு போனேன். அங்க அசோசியேஷன் ஹெட் மூலமா ரெசிடெண்ட்ஸ் எல்லாருக்கும் வாட்ஸப்ல ∴போட்டோவ ஷேர் பண்ணி அலெர்ட் பண்ணிட்டேன். அவனப் பிடிச்சு ஸ்டேஷன்ல வச்சு அவன்ட்ட இருந்த ∴போட்டோஸ், மெமரி கார்டு, ∴போன் எல்லாத்தையும் கைப்பத்திட்டேன்”.

“வெல் டன் வசந்த்! வெல் டன்!”

“என் வீட்டுப் பொன்ன அவன் இந்த மாதிரி மிரட்டினா எப்படி டீல் பண்ணுவேனோ, அப்படித்தான் நான் நினைச்சு வேகமா ட்ரேஸ் பண்ணினேன் பெண்கள ஆபாசமா படமெடுத்து மிரட்டுறவங்களக் கடுமையாகத் தண்டிக்கனும் சார். வெளியில விடவே கூடாது.”

“யூ ஆர் ரைட் வசந்த்! மீடியாஸ் கூட உங்களப் பாராட்டி எழுதியிருக்காங்க. கிரேட் ஜாப், உங்க ப்ரமோஷன் பத்திகூட பேசிட்டிருக்கேன், ஐ விஷ் யூ ஆல் சக்ஸஸ்”, என்ற படியே கை கொடுத்தார்.

“தேங்க்யூ சோ மச் சார்”.

கைகுலுக்கி வெளியேறினான் வசந்த்.

வெளியே இருவர் பேசுவது காதில் விழுந்தது.

‘‘என்ன ஏட்டய்யா இது, சும்மா வசந்த், வசந்த்னு, ஏதோ பெரிசா சாதிச்சுட்ட மாதிரி, ஹீம் வாய்ப்பு கிடைச்சிருந்தா நானும் தான் அவனப் பிடிச்சிருப்பேன். என்னமோ, எல்லாரும் பெரிசா பேசிட்டு’’.

‘‘ஆமா, உங்களுக்கு வாய்ப்பு சரியா அமைய மாட்டேங்குது சார். இல்லன்னா, நீங்க எப்பவோ அவர முந்தி போயிருப்பீங்க’’.

ஏட்டு மங்களராஜீம் துணை ஆய்வாளர் அருணும் தான் முனங்கிக் கொண்டிருந்தார்கள்.

‘‘இங்க என்ன ரகசிய பேச்சுவார்த்தை ரெண்டு பேருக்கும்?’’

வசந்த் சற்றே கோபமாகக் கேட்டான்.

‘‘ஒன்னுமில்ல சார்! நீங்க அவன எப்படி பிடிச்சீங்கனு சொல்லிக்கிட்டிருந்தேன் வேற ஒன்னுமில்ல.’’

கோணலாக சிரித்த ஏட்டு மங்களராஜ் ஓரக்கண்ணால் அருணைப் பார்த்தான். அவனோ வசந்தை முறைத்தபடி நின்றிருந்தான்.

‘‘என்னையப் பத்தி என்ன பேசியிருப்பீங்கனு தெரியும்; போய் வேலையப் பாருங்க’’.

தொப்பியைச் சரிசெய்தபடியே கிளம்பினான் வசந்த்.

‘‘ரொம்பத்தான் பண்றாரு. எனக்கொரு வாய்ப்பு கிடைக்காமலா போகும். என்ன பண்றேன் பாரு, எல்லாத்துக்கும் சேத்து வச்சு செய்றேன்’’. மனதுக்குள் கருவிக்கொண்டே தன் இடத்தில் அமர்ந்தான் அருண்.

‘‘என் துறையிலேயே எனக்கு எதிரிகள் உருவாகுறாங்களே’’, என்று எண்ணியபடியே சென்றான் வசந்த்.

5

கல்லூாயில் இரண்டாம் பாடவேளை முடிந்து மூன்றாம் பாடவேளை துவங்கியது. மகிழினியும், அவள் தோழிகளும் படிகளில் ஏறினர். மகிழினி தன் கையில் வைத்திருந்த புத்தகங்களை ஒவ்வொன்றாகப் பார்த்தபடி வந்தாள்.

‘ஒரு புத்தகம் குறையுதே’ என்று தேடியவளுக்கு, தான் நவீனாவிடம் அதைக் கொடுத்தது நினைவுக்கு வந்தது.

‘‘நவீனா, என் புக் எங்க?’’

சற்று யோசித்த நவீனா,

‘‘அந்த ப்ளாக்ல டெஸ்க் அடில வச்சிட்டு மறந்து வந்துட்டேன்’’ என்றாள்

‘‘என்னடி நீ’’, சலித்துக் கொண்ட மகிழினி, ‘‘சரி நானே போய் எடுத்துட்டு வர்றேன். கால்ல அடிபட்டுருக்குனு சொன்னல்ல, இதைக் கொண்டு போ. நான் வர்றேன்.’’ தன்னிடமிருந்த மீதி புத்தகங்களையும் அவளிடம் கொடுத்தாள்.

‘‘ரொம்ப சாரி, மறந்துட்டேன்.’’ பரிதாபமாகக் கூறினாள் நவீனா.

‘‘சரி, அத விடு.’’

வேகமாக படிகளில் இறங்கினாள்.

புல் தரையில் சிறிது தூரம் மெல்லிய காற்றினிடையே நடந்து மாடி ஏறினாள்

‘‘நல்ல வேளை புத்தகத்த யாரும் எடுக்கல’’, என்றபடியே புத்தகத்தை எடுத்துக் கொண்டவள், தமிழாசிரியரின் கைப்பேசி அங்கு கிடப்பதைக் கண்டு,

‘‘தமிழ் சார் போன் இங்க கிடக்கு. சார் மறந்து போய் வச்சிட்டு போய்ட்டாரா?’’, என யோசித்தவள், ‘‘சரி கொண்டுபோய் கொடுப்போம்’’

அதையும் எடுத்துக்கொண்டு கீழிறங்கினாள். யாரோ ரகசியமாகப் பேசுவது காதில் விழ அங்கே நின்றாள்.

‘‘அப்போம் சாயங்காலம் வீட்டுக்கு வா. இன்டர்னல், லேப், எக்ஸ்டர்னல் பத்திலாம் கவலையே படாத நான் பாத்துக்கிறேன்,’’ என்று ஒருவர் கமுக்கமாகப் பேசுவது கேட்டது.

‘‘படிக்கு அடியில நின்னுட்டு பேசுறாங்களே. இது தேவராஜ் குரல் ஆச்சே’’,

ஒரு கணம் திகைத்தவள், யார் யார் பேசுகிறார்கள் என்று மெதுவாகப் பார்த்தாள்.

“அதெல்லாம் ஓகே சார். ஆனா பிரச்சினை வராதுல”, ஒரு பெண்ணின் குரல்.

“அதெல்லாம் ஒரு பிரச்சினையும் வராது! நீ ஏன் கவலைப்படுற, சாயங்காலம் வீட்டுக்கு வா. எல்லாத்தையும் நான் பாத்துக்குறேன்”.

“இது எதுவும் சரியாப் படலையே”, குழம்பினாள் மகிழினி.

அந்தப் பெண் போய்விட்டாள். பின் மகிழினி படியில் இறங்குவதைப் பார்த்தவன் பேயறைந்தாற் போல் முழித்தான்.

“ஒரு வேளை நாம பேசினத எல்லாம் மகிழினி கேட்ருப்பாளோ?” என்று யோசித்தவன், “ஏய்! நீ இங்க என்ன பண்ற?”, அலறினான்.

மகிழினி கவனிக்காதது போலச்சென்றாள். வேகமாக வந்தவன் அவளை மறித்து, “கூப்பிட்டா கேக்காத மாதிரி போற?” என்றான்.

“என்னை எப்போம் கூப்பிட்டீங்க?”,பதில் கேள்வி கேட்டாள் மகிழினி.

“இப்பதானே கூப்பிட்டேன்”

“இல்லயே”

“ஏய், இங்க என்ன பண்றன்னு கேட்டேன்?”

“ஏய்னு கூப்பிட்டேன்கிறீங்க. யாரக் கூப்பிட்டீங்கனு எப்படி தெரியும்?”

எரிச்சலோடு பார்த்தாள் மகிழினி

“இங்க என்ன பண்ணிட்டிருக்க?”

“புக் எடுக்க வந்தேன்” என்றவள் வேகமாக அவ்விடத்தைவிட்டு அகன்றாள்

ஆனால் அவள் மனம் அவ்விடத்தைவிட்டு அகலவில்லை. அவர்கள் இருவரது பேச்சையே சுற்றிச்சுற்றி வந்தது. குழம்பியபடியே வகுப்புக்குச் சென்றாள்.

“அந்தப் பொண்ணு எதுக்கு சாயங்காலம் அவன் வீட்டுக்குப் போகனும்? இன்டர்னல், லேப், எக்ஸ்டர்னல் எல்லாம் நான் பாத்துக்குறேன்னா, அதுக்கு என்ன அர்த்தம். என்னைப் பார்த்தவுடனே எதுக்கு இவ்ளோ பதற்றம்? ஒன்னும் புரியலையே…..”

கேள்விகள் ஓயாத அலைகளைப் போல அவள் மனதில் எழும்பிக் கொண்டேயிருந்தன.

இது ஒருபுறமிருக்க, அவனோ,

“நாம பேசினதை கேட்டிருப்பாளோ? இந்தப் பிள்ளையக் கல்லூரியவிட்டு வெளியேத்தலைனா, நம்மள மாட்டிவிட்டிரும். எப்படியாவது வெளியேத்திடனும்” என்று கங்கணம் கட்டிக் கொண்டவன், மகிழினிக்கு எதிராகச் சதிவலை பின்ன ஆயத்தமானான்.

6

நகரத்து சாலைகளில் வாகனங்களின் இரைச்சல், கடும்புகை ஆகியவற்றைக் கடந்து வீட்டை வந்தடைந்தான் வசந்த்.

வீட்டினுள் நுழைந்தவுடன் சமையல் மணம் அவனைக் கட்டிப்போட்டது. ‘‘அம்மா! இன்னிக்கி வத்தக்குழம்பு, கரெக்டா?’’ உற்சாகமாக வந்தான். சமையலறையிலிருந்து வெளியே வந்த அவனது தாயார்,

‘‘எப்படிடா கண்டுபிடிச்ச? ’’ என்றார்.

‘‘அதான், வாசனை தெரு வரைக்கும் மணக்குதே.’’

அவனது களைப்பெல்லாம் காணாமல் போயிருந்தது.

‘‘சரி வேலையெல்லாம் எப்படி போச்சு?’’ என்றாள்.

‘‘அம்மா ஏசி சார் என்னையப் பாராட்டினாங்கம்மா. ப்ரமோஷன் சம்பந்தமாக் கூட பேசுறாங்களாம்மா….. எல்லாம் உங்க ஆசீர்வாதம்தான் மா.’’

‘‘நான் என்னடா பெரிசா பண்ணிட்டேன்?’’

‘‘நான் ரெண்டு மாசக் குழந்தையா இருக்கும்போதே அந்த ஆள் உங்களைவிட்டுட்டு ஓடிட்டான். அதுக்கப்புறம் நீங்க தனியாளா இருந்து என்னைய வளர்த்திருக்கீங்க. வீட்டு வேல செஞ்சு,படிக்க வைச்சு, விருப்பப்பட்டபடியே என்னைய இன்ஸ்பெக்டரா ஆக்கிட்டீங்க ஐ ஆம் சோ ப்ரவுட் ஆ∴ப் யூ மா. உங்களப் பார்த்த பிறகுதான்மா எனக்கு ஒவ்வொரு பெண்ணும் கடவுளாத் தெரியுறாங்க’’ பேசும்போது பூரிப்பு வெளிப்பட்டது.

‘‘அத விடுடா. நீ இன்ஸ்பெக்டர் ஆனதினாலே எனக்குதான்டா பெருமை. நான் பட்ட கஷ்டமெல்லாம் ஒரு நொடியில் மறந்திடுச்சு. நாம செய்யுற வேலையில நேர்மையா இருக்கனும். அது நம்மள எப்பவும் காப்பாத்தும், சரி சாப்பிட வா’’ என்றாள் வசந்தின் தாய்.

நிறைந்த மனதோடு உணவருந்தச் சென்றான் வசந்த்.

7

இனிதான மாலைப்பொழுது. மாசில்லாத காற்று கிடைக்கக்கூடிய இடத்தில் மகிழினியின் வீடு ரம்மியமாக அமைந்திருந்தது. சுற்றிலும் சில தென்னை மரங்கள், வாழை மரங்கள், பூச்செடிகள் எனக் கண்ணுக்கு குளிர்ச்சியைத் தந்தன. தோட்டத்தில் ஊஞ்சலாடிக் கொண்டே கல்லூரியில் நடந்த நிகழ்வைப் பற்றிச் சிந்தித்துக் கொண்டிருந்தாள்.

‘‘ஏற்கனவே அப்பாவுக்கு நான் காலேஜ் படிக்கிறதே பிடிக்கல. வேண்டா வெறுப்பாதான் சேத்து விட்டார். அம்மா காலேஜ்ல பிரச்சனைன்னு சொன்னா பயப்படுவாங்க. நீ காலேஜீக்கே போகாதன்னு சொல்லுவாங்க! என்ன செய்றது?’’

இவ்வாறான எண்ண ஓட்டத்தில் மூழ்கியிருந்தவளின் முன் அவளது அண்ணன் வந்து நின்றான்.

‘‘என்ன மகிழினி! என்னமோ சீரியசா யோசிச்சிட்டிருக்க போல?’’

சிறுவயதிலிருந்தே அவள் தன் அண்ணனை விட்டுப் பிரிந்ததில்லை.

வீட்டில் அப்பாவும் அண்ணனுக்கே முன்னுரிமை கொடுத்தாலும் கூட, அவன் தன் தங்கையிடம் அதிக அன்பு கொண்டிருந்தான்.

விட்டேந்தியாக சிரித்தவள்,

‘‘ஒன்னுமில்ல அண்ணா, ஒரு நோட்டக் காணோம், அத எங்க வச்சோம்னு யோசிச்சுக்கிட்டு இருந்தேன்’’ என்றாள்.

அவளது முகக்குறிப்பை வைத்து வேறு ஏதோ பிரச்சனை என்பதைப் புரிந்து கொண்டான்.

‘‘இல்லையே! வேற ஏதோ டென்ஷன் மாதிரியில்ல தெரியுது. காலேஜ்ல ஏதாவது பிரச்சனையா?’’

இதற்குமேல் தன்னால் மறைக்க முடியாது என்பதை உணர்ந்த மகிழினி, தன் அண்ணனிடம் நடந்ததை எல்லாம் விவரித்தாள். இதைக் கேட்டவன்,

‘‘இதெல்லாம் ஒரு விஷயமா? அந்த சார் அப்படி பேசினா பேசிக்கிட்டே இருக்கட்டும். காதுல வாங்கிக்கிடாத அவ்வளவுதான். எந்தப் பிள்ளை எப்படிப் போனா நமக்கென்ன?

நீ நல்லா படிக்கிற பிள்ளை. போனோமா நல்லா படிச்சோமா, வந்தோமானு இரு, அவ்வளவுதான். சரி வா! சாப்பிடலாம்'' என்றபடி உள்ளே சென்றான்.

ஆனால் மகிழினி சமாதானமடையவில்லை. அவளது உள் மனது ஏதோ தீவிரமான சர்ச்சையில் தான் சிக்கிக் கொள்ளப் போவதை உணர்த்தியது.

8

காவல் நிலையத்திற்குள் தனக்கே உரிய உற்சாகத்துடன் நுழைந்தான் வசந்த்; தன் அறைக்குச் சென்று கோப்புகளைப் பார்வையிடத் தொடங்கினான்.

''தாயின் மணிக்கொடி, தாயின் மணிக்கொடி, சொல்லுது ஜெய்ஹிந்த்'' என்ற பாடலோடு அவனது அலைபேசி ஒலித்தது. ஒரு தொலைபேசியில் இருந்து அழைப்பு வந்துள்ளதைக் கவனித்தான்.

''ஹலோ, வசந்த் ஹியர்.''

மறுமுனையில் ''ஹலோ'' என்று ஒரு பெண்ணில் குரல் மெல்லிதாக ஒலித்தது.

''ஹலோ, சொல்லுங்க.''

''இன்ஸ்பெக்டர் வசந்த் சார் தானே?''

''யெஸ், நீங்க?''

''சார், நான் ஸ்டேஷனுக்கு இரண்டு தெரு தள்ளியிருந்து பேசுறேன். இங்க ஒரு வீட்ல நிறைய ரவுடிக உக்கார்ந்து யாரையோ கொல்றதுக்கு ப்ளான் போடுறாங்க. நீங்க உடனே வந்தா அவங்களப் பிடிச்சிடலாம். பாவம் யாரையோ கொல்லப் போறாங்க. அவங்க பேசினத நான் தற்செயலா கேட்டேன்''.

''சரி, நீங்க அங்க மறைஞ்சு இருந்து, அவங்க வெளியே போனா சொல்லுங்க. நான் உடனே வர்றேன்'' என்றவன் இணைப்பைத் துண்டித்தான். சிறிய சந்தேகம் அவனுக்குள் படர்ந்தது. சாதாரண உடைக்கு மாறியவன்,

''டிரைவர், ஜீப்பை எடுங்க'' என்றான்.

''சாரி சார். ஜீப் ரிப்பேர்.''

''ஜீப் ரிப்பேரா?'' நேத்து நல்லாத்தானே இருந்துச்சு?''

''ஆமாம் சார். காலையில தான் ரிப்பேராயிடுச்சு.''

''இது எதுவுமே சரியா படலயே'', சிந்தித்தபடியே இரு சக்கர வாகனத்தை எடுத்துக்கொண்டு சென்றான்.

இடத்தை அடைந்தவன் சுற்றிப் பார்த்தான். பதுங்கியிருந்த பெண் வசந்த் அருகில் வந்தாள்.

''இந்த வீடு தான்'' என்றவள், மீண்டும் விலகிச் சென்றாள்.

கவனத்தோடு அந்த வீட்டிற்குள் மெதுவாக நுழைந்தான். சுற்றுமுற்றும் பார்த்தபடியே உள்ளே சென்றான்.

“நல்லா இருக்கு சார். ரொம்ப நல்லா இருக்கு.” சத்தமாக கைதட்டியபடியே நின்றிருந்தான் அருண். சட்டென்று திரும்பிய வசந்த், அருணைக் கண்டவுடன் குழப்பம் அடைந்தான்.

“இந்த இடத்துக்கு வர்றதுக்குத்தான் ம.ஃப்டிக்கு மாறினீங்களா? ஒரு இன்ஸ்பெக்டர் இவ்வளவு கேவலமா ஒரு மோசமான இடத்துக்கு பப்ளிக்கா வந்து நிக்கிறீங்க?”

வசந்த் ஏதும் பேசாமல் நின்றிருந்தான்.

“இதுக்குத் தான் ஜீப் ரிப்பேர்னு தெரிஞ்சுக்கிட்டே எங்கள நம்ப வைக்க ஜீப் எடுக்கச் சொல்லிக் கேட்டீங்களா? ஐ ஆம் சாரி சார். நான் ஏ.சி சார்க்கு இன்.ஃபார்ம் பண்ணியாகனும்”.

மனதுக்குள் சந்தோஷத்துடன் உயர் அதிகாரியை அழைத்தான் அருண்.

9

காலை நேரம்.

வகுப்பிற்குத் தாமதமாகிவிட்டதே என்ற பரபரப்புடன் ஓட்டமும் நடையுமாக வகுப்பை வந்தடைந்தாள் மகிழினி. தமிழாசிரியர் அவளை உள்ளே அனுமதித்துவிட்டார். நிம்மதிப் பெருமூச்சுடன் போய் தன்னுடைய இடத்தில் அமர்ந்தாள்; இலக்கண வகுப்பு தொடங்கியது. பாடம் சுவாரசியமாச் சென்று கொண்டிருந்த தருணத்தில் ஒரு மாணவன் வாசலருகே வந்து நின்றான்.

‘‘எக்ஸ்க்யூஸ் மீ,சார்’’

‘‘யெஸ்’’ என்றார் ஆசிரியர்.

‘மகிழினியை ஹெச்.ஓ.டி.சார் கூப்பிட்டாங்க’’.

‘‘மகிழினி போய்ட்டு வாம்மா’’ என்றார்.

‘‘இவ்வளவு நேரம் நல்லாத்தான போய்ட்டிருந்தது’’ என்று யோசித்தவாறே துறைக்குச் சென்றாள்.

‘‘எக்ஸ்க்யூஸ் மீ சார்’’.

‘‘டோன்ட் யூ நோ ஹவ் டு பிஹேவ் டு எ ப்ரோ.ஃ.பஸர்? கோ அன்ட் மீட் த ப்ரின்சிபல்’’.

காட்டமாகப் பதில் வந்தது.

தேவராஜோ அவளைப் பார்த்து நக்கலாகச் சிரித்தான்.

இடிவந்து விழுந்ததுபோல இருந்தது மகிழினிக்கு. சுதாரித்துக்கொண்டவள், முதல்வரைப் பார்க்கச் சென்றாள். ஆனால், அவர் வேறு வேலையில் கவனம் செலுத்துவதாகக் கூறி அவளை அனுப்பிவிட்டார். மீண்டும் வகுப்பிற்கு வந்தாள். வழியெங்கும், ‘‘ஏன் என்னை மட்டும் பிரச்சினை துரத்தித் துரத்திவருகிறது?’’ என்று அங்கலாய்த்தபடியே வந்தாள்.

வகுப்பில் நுழைந்தவுடன் தோழிகள் என்ன விவகாரம் என்று கேட்க ஆரம்பித்தனர். தன்னை துறைத்தலைவர் திட்டி அனுப்பியதை வருத்தத்தோடு தெரிவித்தாள். இதைக் கேட்டவுடன் அவர்களுக்கு என்ன செய்வதென்று புரியவில்லை.

பேராசிரியை பத்மா மகிழினியைத் துறைத்தலைவர் அழைப்பதாகக் கூறினார். பனியில் கருகிய மலர் போல் அவளது மனம் வாடியது, என்ன நடந்தது என்பதை அவளிடம் கேட்டறிந்து கொண்டவர், அவளுக்கு ஆறுதலாகப் பேசினார்.

‘‘நீ நல்லாப் படிக்கிற பிள்ளை! காலேஜ்ல ஒன்னு ரெண்டு சின்னச்சின்னப் பிரச்சினை வரத்தான் செய்யும். அதையெல்லாம் ஈஸியா எடுத்துட்டுப் போகப் பழகிக்கனும்டா’’ என்றார்.

துறையை அடைந்தவுடன் மீண்டும் பனிப்போர் ஆரம்பமாகியது.

‘‘டிட் யூ மீட் த ப்ரின்சிபல்?’’

வழக்கம்போல் துறைத்தலைவர் கத்த ஆரம்பித்தார்.

பேசுவதற்கு வார்த்தைகள் எழவில்லை. இருந்தாலும் பேசினாள்.

‘‘ஹீ இஸ் ஆன் அன் இம்பார்டண்ட் வொர்க். சோ ஐ காண்ட் மீட் ஹீம்’’

‘‘தேவராஜ் சார் அவ்வளவு சொல்றார். கம்ப்ளெயண்ட் எழுதிக் கொடுத்திருக்கிறார். படில வச்சு எதிர்த்துப் பேசினியாம்ல. ஏய்னு கூப்பிட்ட என்ன தப்பா?’’

‘‘அங்க என்ன நடந்துச்சுனு தெரிஞ்சுட்டு கேளுங்க சார்.’’

‘‘யூஷீட் நாட் எண்டர் த க்ளாஸ் அன்ட் யூ சுட் ரைட் அபாலஜி லெட்டர்’’.

‘‘ஐ காண்ட் ரைட் சார்’’ என்றவள் வெளியேறினாள்.

சில மணி நேரம் மைதானத்தில் இருந்தவளை, வந்து சந்தித்தாள் நவீனா. நவீனா என்ன நடந்தது என்று கேட்கும்போதே, மகிழினியின் கண்கள் கலங்கியது. நடந்ததனைத்தையும் கொட்டித் தீர்த்தாள்.

‘‘ஏற்கனவே எங்க அப்பாவுக்கு என்னையப் படிக்க வைக்கிறதுல விருப்பம் இல்லை.இதில இப்படி பிரச்சனைன்னு தெரிஞ்சுச்சுன்னா, படிச்சது போதும் காலேஜீக்குப் போக வேணாம்னு சொல்லிடுவார்’’.

ஒரு மாணவன் வந்து மகிழினியை முதல்வர் அழைப்பதாகக் கூறினான். நவீனா, ‘‘மகிழினி, பொறுமையா பேசு.எனக்கும் கஷ்டமா இருக்கு’’என்றாள். எழுந்து சென்றாள் மகிழினி. முதல்வர் அறையை அடைந்தாள்.

‘‘எக்ஸ்க்யூஸ் மீ சார்.’’

“கம் இன். உம்மேல தேவராஜ் சார் நிறைய கம்ப்ளெய்ண்ட்ஸ் சொன்னாங்க.எழுதியும் கொடுத்திருக்காங்க. ஸோ, யூ ஹேவ் பீன் சஸ்பென்டட் ஃபார் ஃபிப்டீன் டேஸ்”.

காலுக்குக் கீழ் பூமி நழுவியதைப் போல் திக்கித்து நின்றாள் மகிழினி!

10

உதவி ஆணையாளரின் வாகனம் வேகமாக வந்து நின்றது. பரபரப்பாக இறங்கினார். அவரைக் கண்டவுடன் வசந்தும், அருணும் வணக்கம் தெரிவித்தனர். உதவி ஆணையாளர் அருணை நோக்கி,

“வாட்ஸ் த ப்ராப்ளம் வித் யூ, அருண்? ”, என்றார்.

“சார், ஃபோன்ல சொன்னேனே சார், இன்ஸ்பெக்டர் வசந்த் இப்படித் தப்பான இடத்துக்கு வெளிப்படையா….”

அவன் முடிப்பதற்குள் இடைமறித்தார் உதவி ஆணையாளர்.

“நான் சென்ஸ், தப்பான இடத்துக்கு வர்றவர் என்கிட்ட சொல்லிட்டா வருவார்?”

முகத்தில் ஓங்கி அறைந்ததைப் போன்று இருந்தது அருணுக்கு. வசந்தை ஏறிட்டான். அவனோ மிடுக்காக நின்றான்.

“ஆன்ஸர் மீ அருண்” உதவி ஆணையாளர் மீண்டும் கேட்டார்.

மூச்சு வாங்கியது அருணுக்கு.

“இல்ல சார், அது வந்து ……”

“என்னவந்து, போயி, உங்க இன்ஸ்பெக்டர நீங்களே அசிங்கப்படுத்துவீங்களா? இந்த மாதிரி ஒரு ஃபோன் வந்துச்சு எனக்கு சந்தேகமா இருக்கு, நான் போய் செக் பண்றேன்னு சொல்லிட்டுத்தான் வந்தார். இப்படி முந்திரிக் கொட்டை மாதிரி அரைகுறையா கேட்டுட்டு இஷ்டத்துக்கு பேசுவீங்களா?”

சமாளிக்கத் தொடங்கினான் அருண்.

“நானும் யோசிச்சேன் சார்! நம்ம வசந்த் சார், இப்படிப் பண்ணுவாரான்னு”, உள்ளம் பற்றி எரிந்தது.

“நான் வேற ஒரு கேஸ் அட்டெண்ட் பண்றதுக்காக இந்தப் பக்கம் வந்துட்டிருந்தேன். அப்படியே இதையும் பாத்துட்டுப் போலாம்னு வந்தேன். வசந்த், கன்டினியூ யுவர் ஜாப்” கூறிமுடித்துவிட்டு அருண் பக்கம் திரும்பினார்.

“லாஸ்ட் வார்னிங் ஃபார் யூ அருண், டோன் பீ சில்லி” வெளியேறினார்.

தன் திட்டம் வீணாய்ப் போன ஆத்திரத்தில் நின்றிருந்தான் அருண். வசந்த் அவன் அருகில் வந்தான்.

‘‘என்ன அருண், ப்ளான் சொதப்பிடுச்சோ?’’

வேறு பக்கம் பார்த்தபடி நின்றிருந்தான் அருண்.

‘‘நீ செட்டப் பண்ண அந்த லேடிய சும்மா ஒன்னும் விடல. அவளோட செல்ல பிடுங்கிட்டு தான் அனுப்பினேன்’’ என்ற கூறிய படியே அவளது அலைபேசியைக் காண்பித்தான்.

திருடனுக்குத் தேள் கொட்டியது போல் உணர்ந்தான் அருண்.

‘‘இதுல லாஸ்ட் டயல்ட் நம்பர் உன் நம்பர்தான்னு நிரூபிக்கிறதுக்கு எனக்கு ரொம்ப நேரமாகாது. நீ தான் சிறு பிள்ளைத்தனமா பண்றேன்னா நானும் அப்படி நடந்துக்க முடியுமா?’’

கோபத்தோடு கேட்டான் வசந்த். அருணிடமிருந்து பதிலில்லை.

‘‘இனிமே இப்படி நடந்துக்காதீங்க. போலீஸ்-க்கான கண்ணியத்த காப்பாத்துங்க’’ கூறிவிட்டு கிளம்பினான் வசந்த்.

11

இறக்கை பிய்த்தெறியப்பட்ட பட்டாம்பூச்சி போல வீட்டின் ஒரு ஓரத்தில் அமர்ந்திருந்தாள் மகிழினி.

‘‘அப்படி என்ன தப்பு பண்ணினோம்னு சஸ்பென்ட் பண்ணிருக்காங்க? நியாயத்துக்கு ஆதரவா குரல் கொடுக்க ஒருத்தருக்குமே வாய் வரலையே? எல்லாருமே குருடர்களாகவும், செவிடர்களாகவும், ஊமைகளாகவும் நடமாடுறாங்களே, ஏன்?’’

நினைக்க நினைக்க அவளது மனம் கனத்துப்போனது.

‘‘வீட்ல அப்பாவுக்குத் தெரிஞ்சா அவ்வளவுதான். என்ன பண்றது? எப்படியாவது அவன் மேலதான் தப்புங்கறத நிரூபிக்கனும். சஸ்பென்ஷனை கேன்சல் பண்ண வைக்கனும். வைக்கறேன், எம் மேல தப்பு இல்லாதபோது நான் வருத்தப்படத் தேவையில்லை. இப்பவே இதுக்கான வேலையில இறங்குறேன்’’.

வீறு கொண்டு எழுந்தவள், மனதிற்குள் திட்டம் வகுத்துக்கொண்டாள். மறுநாள் காலையில் வழக்கம்போல் கல்லூரிக்குக் கிளம்பினாள். தாளாளரின் அறைக்குச் செல்ல முயற்சித்தாள். ஆனால் அங்கிருந்த அவரது உதவியாளரோ, முன் அனுமதி இன்றி யாரும் அவரைச் சந்திக்க முடியாது என்று கூறிவிட்டார். சிறிது நேரம் வெளியே நின்றவள் தாளாளர் வருவதைக் கண்டாள். மீண்டும் உள்ளே செல்ல முயற்சித்தாள். அவளை உள்ளே விடவில்லை.

ஐந்து மணி நேரம் தொடர்ந்து நின்றவளைக் கவனித்த தாளாளர் அவளை உள்ளே வரச் சொன்னார்.

‘‘எக்ஸ்க்யூஸ் மீ சார்’’

‘‘யெஸ்’’

‘‘குட் ஆ.ஃ.பர்டர்னூன் சார். ஆர் யு .ஃ.ப்ரீ நவ் சார்?’’

‘‘ம், ஐ ஆம் பிஸி’’.

‘‘ஒரு அஞ்சு நிமிஷம் மட்டும் சார், ப்ளீஸ். ஒரு ரிக்வஸ்ட்’’.

‘‘ஓகே டெல் மீ’’

‘‘நான் நம்ம காலேஜ்ல .ஃ.பர்ஸ்ட் இயர் படிக்கிற ஸ்டூடண்ட் சார். என் மேல ப்ரொ.ஃ.பஸர் தேவராஜ் இன்டிசிப்ளின்னு புகார் எழுதி கொடுத்ததுனால பதினஞ்சு

நாள் என்னைய சஸ்பென்ட் பண்ணியிருக்காங்க. பட் அவர் என் மேல கம்ப்ளெய்ண்ட் பண்ணுனதுக்கான காரணம் அவர் ஒரு பொண்ணோட பேசிட்டிருந்தத நான் பார்த்தனாலதான் சார் ப்ளீஸ், இந்த வீடியோவ நீங்க பாருங்க.''

அலைபேசியை நீட்டினாள்.

அன்று படிக்கட்டுக்கு அடியில் அவனும் மாணவியும் பேசியது முழுவதும் தெளிவாக ஒளிபரப்பாகியது. அதைப் பார்த்த தாளாளரின் முகம் இருண்டு போனது. கனத்த அமைதி. பிறகு நிதானித்துக் கொண்டவர்,

''சரிம்மா, நீ க்ளாஸ் அட்டெண்ட் பண்ணலாம். இந்த வீடியோவ நீ அழிச்சிடு.''

''தப்பே செய்யாத எனக்கு சஸ்பென்ட் ஆர்டர் கொடுத்து, அத நோட்டீஸ் போர்டுல ஒட்டி இவ்வளவு அசிங்கப்படுத்துனீங்க. பிரின்சிபல் என் தரப்புல பேசக்கூட அனுமதி கொடுக்கல. நான் இவ்வளவு வேதனைப்பட்டிருக்கேன். இவ்வளத்துக்கும் காரணமான ப்ரொபஸர் தேவராஜை அப்படியே சும்மா விட்டுடுவீங்களா? எத்தன பிள்ளைங்களோட வாழ்க்கை வீணாப்போகுது? இதுல நியாயம் எங்க இருக்கு சார்?''

பொரிந்து தள்ளினாள், மகிழினி. அவளது தரப்பில் நியாயம் உள்ளதல்லவா? தாளாளருக்கோ என்ன சொல்வதென்றே தெரியவில்லை. இங்கும் அங்கும் பார்த்தார்.

''சோசியல் மீடியாவுல போட்டுச்சுன்னா அவ்வளவு தான்'' என்று எண்ணியவர்,

''இல்லம்மா, கண்டிப்பா ஆக்ஷன் எடுப்போம். உடனே இந்த விஷயம் பரபரப்பானா அந்த மாணவியும் பாதிக்கப்படுவாங்க அதான் இந்த வீடியோவ என் மொபைலுக்கு ஃபார்வர்ட் பண்ணிட்டு, எரேஸ் பண்ணிடு. அவர் மேலே நடவடிக்கை எடுக்குறேன்.''

''அதான் நான் ஏற்கனவே மெமரிகார்ட்ல பதிஞ்சு வச்சுருக்கேனே''என்று யோசித்தவள்,

''ஒகே சார்'' என்றாள்.

''உன்னோட தைரியத்தப் பாராட்டுறேன். பட் எப்படி நீ இந்த வீடியோவ எடுத்த?''

''அன்னிக்கு என்னோட நோட்ட அந்த ப்ளாக்ல இருக்கிற கிளாஸ்ரூம்ல வைச்சுட்டு வந்துட்டதனால, அத எடுக்க நான் மட்டும் போனேன். மாடியில நோட்ட எடுத்துட்டு பாத்தேன், அங்க தமிழ் சார் மொபைல் போன் கிடந்தது. அத சார்கிட்ட கொடுத்துடலாம்னு எடுத்துட்டு படியில இறங்கும்போது தான் அவங்க ரெண்டு பேரும் பேசுறத நான் பார்த்தேன். சட்டுனு படியில உக்கார்ந்து வீடியோ எடுத்து, என்

செல்லுக்கு அனுப்பிட்டு, தமிழ் சார் செல்லுல இருந்து வீடியோவை டெலிட் பண்ணிட்டு, சார்கிட்ட செல்போனைக் கொடுத்துட்டேன்’’.

‘‘சரி! நீ போய் க்ளாஸ் அட்டெண்ட் பண்ணு. ஆல் த பெஸ்ட்.’’

‘‘தேங்க் யூ சோ மச் சார்’’. வெளியே வந்தவள், தன்னைச் சூழ்ந்திருந்த சதியிலிருந்து தான் வெளி வந்ததை எண்ணி மகிழ்ச்சியுடன் வகுப்பிற்குச் சென்றாள், மகிழினி.

12

ஒரு மாதம் கழிந்தது. தேவராஜை வேலையைவிட்டு நீக்கிவிட்டார்கள்.

மகிழினி தேர்வில் முதலிடம் பிடித்திருந்தாள்.

பொங்கல் பண்டிகையைக் கல்லூரியில் வெகு விமரிசையாகக் கொண்டாடினார்கள். மாணவிகள் அனைவரும் சேலை அணிந்து வந்திருந்தார்கள். கல்லூரி வளாகம் வண்ணமயமாக அலங்கரிக்கப்பட்டிருந்தது. பரதம், சிலம்பம், கரகாட்டம் எனக் கலை நிகழ்ச்சிகள் முடிந்தவுடன் அனைவரும் பொங்கல் உண்டனர். மகிழினி நடனமாடினாள். பலரும் பாராட்டினர். விழா நிறைவுபெற மாலை ஆறுமணி ஆகி விட்டது.

மகிழினியும், நவீனாவும் வீட்டை நோக்கி நடந்தனர். அன்றைய நிகழ்ச்சிகளை பற்றி பேசி, சிரித்து மகிழ்ந்தனர். இருள் சூழத்துவங்கியது. தீடீரென்று ஒரு குரல்.

''அங்கேயே நில்லுடி''.

திடுக்கிட்டு இருவரும் பின்னே திரும்பிப் பார்த்தனர். தேவராஜ் வெறிபிடித்தவன் போல அங்கு நின்று கொண்டிருந்தான்.

மகிழினியும் நவீனாவும் என்ன செய்வதென்று ஒன்றும் புலப்படாமல் நின்றனர்.

நவீனா அந்த இடத்தை விட்டு நகரத் தொடங்கினாள்.

''என்ன நவீனா, தனியா விட்டுட்டு போற?.'' மகிழினி அதிர்ச்சியோடு கேட்டாள்.

''நீயும் வா சட்டுன்னு'' அவசரப்படுத்தினாள்.

இருவரும் வேகமாக நடந்தனர். பின்னே திரும்பிப் பார்த்துக் கொண்டே நடந்தாள் மகிழினி. வேகமாக வந்தவன் ஒரு கட்டத்தில் இருவருக்கும். முன்பாக வந்து மறித்தான்.

''உன்னால போறவன் வர்றவன் எல்லாம் என்னையக் கேவலப்படுத்துறான்.

இன்னிக்கோட உன்ன ஒழிச்சுக்கட்டுறேன்'', கத்தியவன் ஓரமாகக் கிடந்த பாராங்கல்லைத் தூக்கிக் கொண்டு மகிழினியை நோக்கி வந்தான்.

''ஐயோ மகிழினி'', பயத்தில் அலறினாள் நவீனா.

தன் மேல் பாறை விழாதபடிக்குத் தன் முழு பலத்தினால் அதைத் தள்ளினாள்.

''அம்மா ……………''

பெருத்த ஓலம்.

ரத்தம் தெறித்தது.

பாறை தேவராஜின் மீது விழுந்து அவனை நசுக்கியது !

உறைந்து போய் நின்றாள் மகிழினி. அதே நேரம் காவல்துறை வாகனம் அந்தத் தெருவில் நுழைந்தது. அதைக் கண்டவுடன், நவீனா இடத்தை விட்டு ஓடிவிட்டாள். நவீனா ஓடுவதைக் கண்ட மகிழினிக்கு பேச்சே எழவில்லை.

வாகனத்திலிருந்து இறங்கினான் அருண்; அவளை ஏற இறங்கப் பார்த்தான்.

“அந்தப் பாடிய பி.எம்.க்கு அனுப்புங்க. அரெஸ்ட் ஹெர்.”

மகிழினியின் கரங்களில் விலங்கு மாட்ட முயற்சித்தனர்.

“சார், நான் கல்லத் தூக்கிப் போடல. அவர் என் மேல போட வந்தார். நான் தள்ளிவிட்டேன். இதுதான் சார் நடந்தது”.

அவள் சொல்லி முடிப்பதற்குள் விலங்கை மாட்டினார்கள்.

ஏட்டு மங்கள்ராஜோ, “முதல்ல வண்டியில ஏறும்மா” என்று அவளை இழுத்துச் சென்று காவல்துறையின் வண்டியில் ஏற்றினான். நடப்பதை விளங்கிக் கொள்ளவே கடினமாக இருந்தது மகிழினிக்கு. வாகனம் காவல் நிலையத்தை நோக்கி விரைந்தது.

13

இரவு மணி எட்டு.

காவல் நிலையத்தில் ஒரு மரப்பலகையில் உட்கார்ந்திருந்தாள் மகிழினி ஒரு நொடியில் தான் கொலைகாரியாகிவிட்டதை அவளால் ஜீரணித்துக் கொள்ள முடியவில்லை.

ஏட்டு மங்கள்ராஜ் அருணிடம், ‘‘வசந்த் சார் நைட் டியூட்டி போயிருக்கார். இன்னிக்கி நைட் வரமாட்டார்’’ என்றான்.

அருணுக்கு உள்ளுக்குள் நிம்மதியாக இருந்தது. ஒவ்வொரு நொடியும் யுகங்களாகக் கழிந்தன. இரவு மணி 10.00. பிற காவலர்களை பல்வேறு வேலை கொடுத்து அனுப்பிவிட்டான், அருண். மகிழினி மெதுவாக எழுந்து மங்கள்ராஜ் அருகில் வந்தாள்.

‘‘சார், எங்க வீட்டுக்கு தகவல் சொல்லிட்டீங்களா?’’ என்றான்.

‘‘போய் பேசாம உக்காரு’’ அலறினான்.

மகிழினி தான் அழுதுவிடக்கூடாது என்பதில் உறுதியாக இருந்தாள். மீண்டும் கேட்டாள்.

‘‘வீட்டுக்கும் இன்ஃபார்ம் பண்ணல, லேடி கான்ஸ்டபிள்சையும் வெளியே அனுப்பி விட்டுடீங்க. என்னை கோர்ட்ல ப்ரொட்யுஸ் பண்ணுங்க.’’ என்றவளது அருகில் வந்து நின்றான் அருண். அவளையே பார்த்துக் கொண்டிருந்தவன்,

‘‘மங்கள்ராஜ், நீங்க கொஞ்ச நேரம் வெளிய இருங்க’’ என்றான்.

அருண் தன்னையே பார்ப்பதைக் கவனித்த மகிழினிக்கு மேலெல்லாம் சில்லிட்டது. அருண் பேச ஆரம்பித்தான்.

‘‘இது ரொம்ப சிக்கலான கேஸ். நீ வெளியே வர்றதுக்கு எப்படியும் ஏழு வருஷம் ஆகும். கல்லத் தூக்கிப் போட்டு கொன்னுக்க. கஷ்டம். அதுக்குப் பதிலா, என் கூட அட்ஜஸ்ட் பண்ணிட்டினா, கேஸை ஃபைல் பண்ணாமலே விட்டுறேன், என்ன சொல்ற?’’ இடியே விழுந்தது போல் இருந்தது மகிழினிக்கு.

‘‘நீயெல்லாம் ஒரு போலீசா? சீ, ஜெயில்ல நான் செத்தாலும் பரவாயில்ல, நீங்க கேக்குறதெல்லாம் நடக்காது’’ என்று, கோபத்தோடு கூறியதுடன் சுற்றும் முற்றும் தப்பிக்க வழி பார்த்தாள்.

‘‘இப்படியெல்லாம் பேசினா சரிப்படாது’’ என்றவன் தீடிரென்று அவள் கையைப் பிடித்தான்.

கையை உதறியவள், அருகில் இருந்த லத்தியை எடுத்து அருணின் தலையில் ஓங்கி அடித்தாள்.சற்றும் எதிர்பாராத அருண்.

‘‘ஆ!’’ என்று வலி தாங்காமல் அலறினான்.

காவல்நிலையத்திலிருந்து வெளியே ஓடினாள் மகிழினி. தடுக்க முயற்சித்த மங்கள்ராஜை உதைத்துத் தள்ளியபடி முன்னேறினாள். எங்கே செல்கிறோம் என்று தெரியாமலேயே ஓடினாள். அவளை இருவரும் துரத்தினர். பிரதான சாலைக்குச் செல்வோம் என்று மகிழினி வேகமாக ஓடினாள். ஓடும்போது பின்னாடி திரும்பிப் பார்த்துக் கொண்டே ஓடியவள், பிரதான சாலையை அடைந்தாள். எதிரே வந்து கொண்டிருந்த வாகனத்தைக் கவனிக்காமல் ஓடினாள். அது அவள் மேல் மோதி நின்றது.

‘‘அம்மா ……..’’

தூக்கி எறியப்பட்டவள் சற்று தூரம் தள்ளிச் சென்று விழுந்தாள். தலையில் அடிபட்டு இரத்தம் வழிந்தது. மயங்கியபடி தரையில் சரிந்தாள்.

14

வாகனத்திலிருந்து அதிர்ந்து போய் வெளியே வந்தான் வசந்த். வசந்தைப் பார்த்தவுடன் இருவரும் ஒளிந்து கொண்டனர்.

மகிழினியின் அருகில் சென்று பார்த்தான், வசந்த். இரத்தம் உறையாமல் வழிந்தது. யாரோ துரத்திக் கொண்டு வந்துள்ளனர் என்பது மட்டும் புரிந்தது. சுற்றிப்பார்த்தான். யாருமில்லை.

‘‘டிரைவர் தூக்குங்க’’ என்றவன், மகிழினியை தனது காரில் உள்ளே படுக்க வைத்து, மருத்துவமனையை நோக்கி விரைந்தான். மருத்துவமனையில் அவளைப் பரிசோதித்த மருத்துவர்கள், பயப்படும்படியாக ஒன்றுமில்லை சிறிய காயம் தான், சிறிது நேரத்தில் விழித்து விடுவாள் என்றனர். அதைக்கேட்ட பின்புதான் வசந்துக்கு நிம்மதியே வந்தது.

மகிழினி சிறிது நேரம் கழித்து கண்விழித்தாள். நாம் உயிரோடுதான் இருக்கின்றோமா, இல்லை, சொர்க்கத்தில் இருக்கின்றோமா என்று குழம்பிக் கொண்டாள். தலை மட்டும் மிகவும் வலித்தது.

தலையைப் பிடித்தபடியே மெதுவாக எழுந்தாள். அதற்குள் செவிலியர் வசந்திடம் சொல்ல, வசந்த் உள்ளே வந்தான். வசந்தின் காக்கிச்சட்டையைக் கண்டவள் பயத்தினால் அலறினாள்.

‘‘ஐயோ நானில்ல சிஸ்டர். போச்சொல்லுங்க. அவர போகச்சொல்லுங்க’’என்று சத்தமிட்டபடி மீண்டும் மயக்கம் அடைந்தாள். வசந்துக்கு ஒன்றும் விளங்கவில்லை. செவிலியரோ, ‘‘சார், நீங்க முதல்ல வெளியே போங்க சார்’’ என்றனர். வசந்த் வெளியேறினான். யாராலோ அவள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளாள் என்பது மட்டும் வசந்திற்கு புரிந்தது. அவன் அலைபேசி ஒலித்தது. அவன் தாயார் தான் அழைத்தார்.

‘ஹலோ, அம்மா’’

‘என்னடா! அப்பவே கிளம்பிட்டேன்னு சொன்ன, இன்னும் வீட்டுக்கு வரல’’

‘‘அது ஒன்னுமில்லமா, ஒரு சின்ன ஆக்ஸிடெண்ட்….’’, அவன் சொல்லி முடிப்பதற்குள்,

‘‘ஆக்ஸிடெண்டா? ஐயோ, உனக்கு என்னடா ஆச்சு? எங்கடா இருக்க?’’ பதறினாள் வசந்தின் தாய்.

‘‘பதறாதம்மா எனக்கு ஒன்னுமில்ல; ஒரு பொண்ணு என் வண்டி முன்னாடி வந்து விழுந்திடுச்சு. அவள கொண்டு வந்து ஹாஸ்பிடல்ல சேர்த்திருக்கேன்.’’

‘‘ஐயோ, பாவமே யார் பெத்த பிள்ளையோ, இப்போம் எப்படிடா இருக்கு?’’

‘‘ஒன்னுமில்ல சின்ன அடிதான். தூங்க வச்சிருக்காங்க, இப்போக் கிளம்பி வாறேன், வைச்சுடுறேன்’’.

செவிலியரிடம், ‘‘நான் வீட்டுக்குப் போயிட்டு சீக்கிரம் வந்துடுறேன் பத்திரமா பாத்துக்கங்க’’. என்றவன் வீட்டுக்குச் சென்றான்.

குளித்து முடித்து உணவு உண்டவனிடம் அவனது தாய் புலம்பிக் கொண்டேயிருந்தாள்.

‘‘பாவம்டா, யார் என்ன கொடுமைப்படுத்துனாங்களோ! சே,பொண்ணுங்க பூ மாதிரி, ஆனா விஷமுள் மாதிரி இப்படி சில அயோக்கியன்கள் அவங்களக் குத்திக் காயப்படுத்துறாங்க. என்னிக்கி தான் இதெல்லாம் ஓயுமோ?’’

மனது கேட்காமல் அனற்றிக் கொண்டேயிருந்தாள்.

‘‘இல்லம்மா, ஒரு பெண்ணுக்கு பூப்போல இனிமையப் பரப்பவும் தெரியும். பூகம்பமா மாறி அநியாயத்த அழிக்கவும் தெரியும். ஒரு பெண் நினைத்தால் அமைதியை நிலைநாட்டவும் முடியும். அநீதிய ஒடுக்கவும் முடியும். பெண்களுக்கு எதிரான குற்றங்கள வேரறுக்க பெண்கள் துணிந்து எழுந்தா யாராலும் எதுவும் பண்ண முடியாதும்மா’’.

சில நிமிட நிசப்தத்திற்குப் பின்,

‘‘சரிம்மா நான் ஹாஸ்பிட்டலுக்குப் போறேன்’’

மீண்டும் மருத்துவமனைக்கு வந்தான். எழுந்து உட்கார்ந்திருந்தாள் மகிழினி. செவிலியர் மகிழினியிடம்,

‘‘இவர்தான் உன்ன அங்கு கொண்டு வந்து அட்மிட் பண்ணின இன்ஸ்பெக்டர்’’.

இன்ஸ்பெக்டர் என்றதும் மகிழினிக்கு ‘பக்’ கென்றது. வசந்த் அவளிடம், ‘‘பயப்படாதீங்க உங்களுக்கு ஒரு பிரச்சனையுமில்லைன்னு டாக்டர் சொல்லிட்டாங்க. நீங்க சே.்.பான இடத்துலதான் இருக்கீங்க’’.

மூச்சு வாங்கியது மகிழினிக்கு. ‘‘இவர் எல்லாத்தையும் கண்டுபிடிச்சிருப்பாரா? ஒன்னும் தெரியலையே,’’ குழம்பினாள்.

‘‘உங்க நேம், பிளீஸ்’’ என்றான் வசந்த்.

‘‘இப்போது உண்மையான பேரைச் சொல்ல வேண்டாம்’’ என்று முடிவு செய்தவள், ‘‘சிநேகா’’ என்றாள்.

‘‘வெல் சிநேகா, என்ன பிரச்சினைனால அப்படி ஓடி வந்தீங்க? பயப்படாமச் சொல்லுங்க’’.

‘‘இவர் விசயம் தெரிஞ்சு கேக்குறாரா, அல்லது தெரியாம கேக்குறாரானு புரியலையே’’, மனதுக்குள் யோசித்தவளுக்கு என்ன சொல்வதென்று புரியவில்லை. இதைக் கவனித்த வசந்த்,

‘‘பயப்படாமச் சொல்லுங்க, ஒரு பிரச்சினையும் வராம நான் பாத்துக்கறேன்’’ என்றான்.

‘‘அதான் சார் யோசிக்கிறேன். ஞாபகம் வரமாட்டேங்குது’’ ஒரு வழியாக ஏதோ ஒன்றைச் சொன்னாள்.

அருகிலிருந்த மருத்துவர்,

‘‘அதிர்ச்சியினால அப்படி ஆகியிருக்கலாம்’’ என்றார்.

‘‘உங்க வீடு, அப்பா, அம்மா, ஏதாவது ஞாபகம் இருக்கா?’’ என்றான் வசந்த்.

‘‘ஐயையோ, அடுத்தடுத்து கேக்குறாரே’’, முழித்தாள் மகிழினி

மருத்துவர், ‘‘ஒரு ஒரு வாரம் பார்ப்போம். தூங்கி எந்திரிக்கட்டும் எல்லாம் சரியாயிடும் இந்த மாத்திரைகளை ரெகுலரா கொடுங்க, டிஸ்சார்ஜ் பண்ணிக்கங்க’’ என்றார். வசந்த் அவளிடம், ‘‘உன்னை காப்பகத்துல விடுறது அவ்வளவு பாதுகாப்பானது இல்ல. உனக்கு மறுபடியும் ஆபத்து வரலாம். உன் வீடே உனக்கு மறந்து போச்சு. அதனால இப்ப என் வீட்டுக்கு உன்னை கூட்டிட்டு போறேன். எங்க அம்மா உன்னைய நல்லா பாத்துப்பாங்க வா’’ என்றான்.

மகிழினி, ‘‘இவர் எப்படிபட்டவரோ? தெரியலையே! ஒன்னு மாத்தி ஒன்னு எங்கயாவது சிக்கிக்கிட்டே இருக்கேன். என்ன ஆகப்போகுதோ தெரியலையே!’’.

‘‘பயப்படாம வா’’ என்றான் வசந்த்.

கலக்கத்தோடே அவன் வீட்டிற்குச் சென்றாள், மகிழினி.

15

வசந்தின் இல்லம்.

மகனின் வருகைக்காக வசந்தின் தாய் வாசலிலேயே காத்துக்கொண்டிருந்தாள்.

மகிழினி தயக்கத்தோடு வந்து இறங்கினாள்.

''வாப்பா! வா! உன் வீடுன்னே நினைச்சுக்க வா!'' கனிவோடு வரவேற்றாள். ஒருவாறாக வீட்டிற்குள் வந்தாள் மகிழினி.

அவளை அமரவைத்து, சூடாக தேநீர் கொண்டு வந்து கொடுத்தாள். தேநீரைக் கூட சந்தேகத்தோடு பார்த்துக் கொண்டிருந்தாள். அதைப் புரிந்து கொண்ட வசந்த், சிறிது தேநீரை வேறொரு குவளையில் ஊற்றி குடித்துவிட்டு,

''சந்தேகப்படாம குடி''என்றான்.

''சாரி சார்'' என்றபடி தேநீரை வாங்கிக் குடித்தாள்.

''பாவம் டா. சாப்பிடக் கூடப் பயப்படுது'' பரிதாபப்பட்டவள், வசந்த்தை தனியே அழைத்துக்கொண்டு போய், ''அந்தப் பிள்ளைக்கு மாத்துத்துணி கூட நம்மக்கிட்ட இல்லடா. நீ போய் நாலு சுடிதார் வாங்கிட்டு வாடா'' என்றாள்.

''சரிம்மா. அவளுக்கு ஏதாவது சாப்பிடக்குடுங்க. நான் அப்படியே வேலைக்குக் கிளம்பறேன்.''

''என்னடா? இப்பத்தான் வந்த, அதுக்குள்ள கிளம்பறேன்கிற?''

''வொர்க் இருக்குமா அப்புறம் இந்த பொண்ணு நம்ம வீட்டில இருக்குறது யாருக்குமே தெரியக்கூடாது. என் டிபார்ட்மெண்ட் சம்பந்தமான ஆள்களுக்கு கூட தெரியக் கூடாது சரியாம்மா?'' என்றான் வசந்த்.

''சரிடா''.

''வர்ரேன்மா'', கிளம்பினான் வசந்த்.

16

ஒரு வாரம் கழிந்தது.

மகிழினியின் குடும்பத்தினர் அவளைத் தேடிக் கொண்டிருந்தனர். மகிழினியின் தந்தை ஆத்திரத்தில் கத்தத் தொடங்கினார்.

‘‘எங்கடி போனா அவ, சுத்தி இருக்கிறவக எல்லாம் அவ எங்கனு கேட்டு சாவடிக்கிறாங்க. இதுக்குத்தான் அவளப் படிக்க வைக்க வேணாம்னு சொன்னேன். பொம்பள பிள்ளைக்கு எதுக்கு படிப்பு? வீட்டைப் பாக்க வேண்டியதுதானே? இப்போம் சனியன் எங்க போச்சுன்னே தெரியலையே!’’.

மகிழினியின் அண்ணனுக்கு அவர் பேச்சு எரிச்சலைத் தந்தது.

‘‘என்னப்பா, இப்படி பேசுறீங்க. அவ என்ன வேணும்னேவா காணாமப் போயிருப்பா? என்ன பிரச்சினைல எங்க மாட்டிட்டு என்ன கஷ்டப்படுறாளோ தெரியல. நவீனாக்கிட்ட கேட்டுப் பார்த்தேன். அவளும் தெரியலங்கிறா,’’

கையைப் பிசைந்தவன் பின், ‘‘பேசாம போலீஸ்ல புகார் கொடுப்போம். எத்தன நாளைக்கு இப்படி விட்டுட்டு இருக்குறது?’’ என்றான்.

மகிழினியின் தாய் பதறினாள்.

‘‘என்னடா! போலீஸ்ல புகார் கொடுப்போம்ங்கிற? பேப்பர்ல போட்டாங்கனா பெரிய அவமானமாப் போயிடும் நாளப்பின்ன யார் அவளக் கட்டுவா?’’

அதற்குள் மகிழினியின் தந்தை வானத்துக்கும் பூமிக்கும் குதித்தார்.

‘‘இப்ப மட்டும் எவன் கட்டுவான்? அதுக்குத்தான் பள்ளிக்கூடம் முடிச்சுவுடனே, என் தங்கச்சி மகனுக்கு கட்டிக் கொடுத்துடலாம்னு சொன்னேன்’’.

‘‘என்னப்பா பேசுறீங்க? அவன் வயசென்ன, இவா வயசென்ன? அந்தக் குடிகாரப் பயலுக்குப் போய், சே……. உங்களுக்கே நியாயமா இருக்கா? ஏம்மா நீயும் பேசாம இருக்க?’’ கொந்தளித்தான் மகிழினியின் அண்ணன்.

‘‘உங்கப்பாவ எதிர்த்துகிட்டு என்னால என்னடா பண்ண முடியும்?’’

‘‘பத்தாம்பசலித்தனமாகவே பேசிட்டு இருங்க நான் என் ஃப்ரென்ட்ஸ மூலமா எப்படியாவது கண்டுபிடிக்கிறேன். அவ நிச்சயம் பத்திரமாத்தான் இருப்பா அவ புத்திசாலி’’

‘‘இப்படி அவளப்பத்திபேசிப் பேசியேத்தான், அவளப் படிக்க வைச்ச. நீ இடம் கொடுக்குறனாலதான் அவ இப்படி எங்கேயோ போய் உக்கார்ந்திருக்கா’’ மீண்டும் மகிழினியின் தந்தை வெறுப்பை உமிழ்ந்தார்.

‘‘சும்மா இருங்கப்பா… நான் அவளக் கண்டுபிடிக்கிறேன். அவ்வளவு தான்’’ வேகமாக வெளியேறினான்.

17

மதிய வேளை. உச்சி வெயில். அருணும் மங்கள்ராஜூம் சாலையோரமாக நின்று கொண்டிருந்தனர்.

போவோர் வருவோரிடம் தலைக்கவசம் அணியவில்லை, ஓட்டுநர் உரிமம் இல்லை என்று பல காரணங்களைக் கூறி பணம் பறித்துக் கொண்டிருந்தனர்.

''அவ என்ன ஆனானே தெரியலையே'', இரு சக்கர வாகனத்தின் சக்கரத்தை ஓங்கி மிதித்தான் அருண்.

''யார் சார்?'' தலையைச் சொரிந்தபடியே கேட்டான் மங்கள்ராஜ்.

அவனை முறைத்த அருண்,

''யார்னு கேட்டுட்டிருக்க? உன்னையெல்லாம் கூட வச்சுக்கிட்டு நான் என்னத்தப் பண்ண?'' தலையில் அடித்துக்கொண்டான். மங்களராஜ் 'திரு திரு' வென விழிப்பதைப் பார்த்து,

''எல்லாம் அந்த மகிழினிங்கிறவதான்'' எரிச்சலில் கத்தினான்.

''கார்ல இருந்து இறங்கி வந்து, அந்தப் பிள்ளைய வசந்த் சார் கூட்டிட்டுப்போனார். கேசும் ஃபைல்லாகல என்னன்னே புரியலையே'' என்றான் மங்கள்ராஜ்.

''அந்த வசந்துக்கு என் ரூட்ல கிராசாகிறதே வேலையாப் போச்சு''.

''அத விடுங்க சார். அந்தப் பிள்ளை எல்லாத்தையம் வசந்த் சார்கிட்ட சொல்லியிருந்துச்சுன்னா ….. நம்ம கதி என்னாகுறது?'' பதறினான் மங்களராஜ். தலையைப் பிடித்தபடி அங்கும் இங்கும் நடந்த அருண்,

''அந்தப் பிள்ளை சொல்லியிருந்துச்சுன்னா அவன் இவ்வளவு நாள் நம்மளச் சும்மா விட்டிருக்க மாட்டான். அந்தப் பிள்ளை வாயத் திறக்குறதுக்கு முன்னாடி, அவ எங்க இருக்கான்னு நாம கண்டுபிடிக்கனும். அநேகமா ஏதாவது காப்பகத்துல தான் விட்ருப்பான். இல்ல அந்தப் பிள்ளையோட வீட்ல கொண்டுபோய் விட்டிருப்பான்''.

''ஆமாம் சார்! அந்தப் பிள்ளையோட வீடு எங்க இருக்குதுன்னு கண்டுபிடிக்கனும்,'' சொல்லிக்கொண்டிருக்கும் போது, தூரத்தில் வசந்த் வருவதைக் கவனித்தான் மங்கள்ராஜ்.

‘‘சார், வசந்த் சார் வர்றாரு,’’

‘‘வந்தா வரட்டும்யா, பெரிய ஜனாதிபதி வர்ற மாதிரி சொல்ற’’ அலட்சியமாக நின்றான் அருண்.

வசந்த் அருகில் வந்தான்.

‘‘சார்’’, விரைப்பாக வணக்கம் வைத்தான் மங்கள்ராஜ். வேண்டா வெறுப்பாக கூட சேர்ந்து வணக்கம் வைத்தான் அருண்.

‘‘ரெண்டு பேரும் இங்க என்ன பண்ணிட்டிருக்கீங்க?’’ வசந்திடமிருந்து கேள்வி அனல் பறக்க எழுந்தது.

‘‘அதுவா சார்! வண்டிய எல்லாம் செக் பண்றோம்’’. அசட்டுத்தனமாய் சிரித்தான் மங்களராஜ்.

‘‘அபராதம் எழுதி ரசீது கொடுக்கிற நோட் எங்கே?’’,கேட்டபடியே

ஏடை எடுத்த வசந்த் புரட்டிப் பார்த்தான்.

‘‘என்ன ஒரு ரசீதும் போடல. அப்ப எல்லாரும் ப்ராப்பரா வந்திருக்காங்க இல்ல?’’ காட்டமாகக் கேட்டான் வசந்த்.

‘‘ஆமாம் சார்! ஆமாம்!. எல்லாரும் ப்ராப்பரா வந்தாங்க.’’ ,சமாளித்தான் மங்கள்ராஜ்.

‘‘உன் பாக்கெட்ட காமி’’, அதே தொனியில் கேட்டான்.

‘‘சார் …’’ இழுத்தான் மங்கள்ராஜ்.

‘‘பாக்கெட்ட காமியா…..,’’ அவனாகவே கையை விட்டு சட்டைப்பையில் இருந்து பணத்தை எடுத்தான்.

‘‘ஏதுயா இவ்ளோ பணம்?’’

‘‘சார் அது வந்து சார்……. என் வீட்டு பணம் சார்,’’

‘‘வெட்கமாயில்ல ரெண்டு பேருக்கும். அங்கயிருந்து எல்லாத்தையும் நான் பாத்துட்டு தான்யா வாரேன். உங்கள மாதிரி ஒன்னு ரெண்டு புல்லுருவிகளாலதான் ஒட்டுமொத்த காவல்துறைக்கே களங்கம். சே…..’’, சீறினான் வசந்த்.

உள்ளுக்குள் வெந்து கொண்டிருந்தான் அருண்.

“என்ன செய்யலையா நம்ம அரசாங்கம்? சம்பளம் கொடுத்து, வண்டி கொடுத்து, யூனி.ஃ.பார்ம், பஸ்ல .ஃ.ப்ரீடிக்கெட், இவ்வளவு கொடுத்தும் ஏன்யா இப்படி அலையுறீங்க? இன்னும் என்னதான் வேணும்?” அவனுக்கு கோபம் அடங்க மறுத்தது.

இருவராலும் பதில் பேச இயலவில்லை.

“உங்க ரெண்டு பேர் மேலயும் ஆக்ஷன் எடுக்கனும், வேற வழியில்ல,” விரைந்தான் வசந்த்.

18

வசந்தின் இல்லம்.

மகிழினிக்கு மனதெல்லாம் குழப்பம்.

தற்காபுக்காக தாக்கியதை நாம் எப்படி எதைக் கொண்டு நிரூபிப்பது? அவ்வாறு நிரூபித்துவிட்டால் பின் கவலை ஏதுமில்லை. சிந்தித்தவளுக்கு ஒரு யோசனை தோன்றியது.

‘‘நவீனா அங்க நடந்தது எல்லாத்தையும் நேரில பாத்தவளாச்சே! அவ வந்து நடந்ததைச் சொன்னாப் போதுமே!’’ ஒரு தெளிவு பிறந்தது மகிழினிக்கு.

வசந்தின் அம்மாவிடம் வந்தவள்,

‘‘அம்மா, எனக்கு பழசெல்லாம் ஞாபகம் வர்றதுக்காகப் பக்கத்துல இருக்குற கோயிலுக்கு போய் வேண்டிட்டு வர்றேன்’’என்றாள்.

‘‘அப்படியாம்மா, அப்ப நானும் கூட வர்றேன்’’ என்றாள் வசந்தின்தாய். இதைக் கேட்டவுடன் பதறினாள் மகிழினி.

‘‘இல்லம்மா, நானே பத்திரமா போய்ட்டு பத்திரமா வந்துடறேன். நீங்க ரெஸ்ட் எடுங்கம்மா’’.

அரைமனதோடு ஒப்புக் கொண்டாள்.

‘‘சரி சீக்கிரமா வா’’.

‘‘அரைமணி நேரத்துல வந்துடறேன்மா’’.

வேகவேகமாகக் கிளம்பினாள். அடுத்த தெருவிலிருந்த பொது தொலைபேசி மூலமாக நவீனாவைத் தொடர்பு கொண்டாள்.

‘‘ஹலோ, நவீனாவா?’’

‘‘நவீனா தான். நீங்க’’

‘‘நவீனா நான் மகிழினி.’’

எதிர்முனையிலிருந்து பதிலில்லை.

‘‘ஹலோ,நவீனா கேக்கலையா?’’

‘‘கேக்குது சொல்லு’’

“நவீனா, அன்னிக்கி என்ன நடந்ததுங்கிறத மட்டும் கோர்ட்ல நீ சொல்றியா? ப்ளீஸ்”.

“என்னிக்கி என்ன நடந்தது?”

அலட்சியமாகக் கேட்டாள் நவீனா. புயலில் தூக்கி வீசப்பட்டது போல இருந்தது மகிழினிக்கு.

“என்ன நவீனா, இப்படி கேக்குற?”

அதிர்ச்சியிலிருந்து அவள் இன்னும் மீளவில்லை.

“எனக்கு எதுவும் தெரியாது”.

தொடர்பு துண்டிக்கப்பட்டது.

மகிழினிக்கு அதை கிரகித்துக் கொள்ளவே சிறிது நேரம் பிடித்தது. இனி அவளிடம் பேசிப் பயனில்லை என்பதை உணர்ந்தவள், அவ்விடத்தைவிட்டு நடக்க ஆரம்பித்தாள். தன்னை யாரும் அடையாளம் கண்டுவிடக்கூடாது என்ற பயத்தில் வேகவேகமாக நடந்து வீடு வந்து சேர்ந்தாள்.

வீட்டு வாசலில் வசந்தின் வண்டி நின்றது.

“ஐயையோ, இவர் கேக்குற கேள்வியையெல்லாம் எப்படி சமாளிக்கப் போறேனோ தெரியலையே…… சரி சமாளிப்போம்,”

யோசித்தவாறே உள்ளே நுழைந்தாள்.

அவளைக் கண்டவுடன் வசந்த்,

“எங்கே போயிட்டு வர்ற சிநேகா?” என்றான்.

“கோயிலுக்கு போயிட்டு வர்றேன் சார். எனக்கு பழசெல்லாம் ஞாபகம் வர்றதுக்காக சாமிக்கிட்ட வேண்டிட்டு வந்தேன்.” மகிழினிக்கு உள்ளுக்குள் உதறியது.

“சரி போ”.

“அப்பாடா… தப்பிச்சோம்,” மனதுக்குள் திருப்திப்பட்டுக் கொண்டே வீட்டிற்கு உள்ளே சென்றாள் மகிழினி.

19

காலைப்பொழுது.

மகிழினியின் சிந்தனை எல்லாம் தான் குற்றமற்றவள் என்பதை எவ்வாறு நிரூபிப்பது என்பதிலேயே இருந்தது.

அந்தத் தெருவழியே தினமும் கல்லூரி முடிந்தபின் அவள் திரும்பி வருவது வழக்கம். அந்த வீதியைக் குறித்தே யோசித்தவளுக்கு சட்டென்று ஒரு பொறி தட்டியது.

‘‘அங்க சிசிடிவி கேமரா இருந்துச்சே….. அந்த மாடி கடையில …. அதுல நடந்ததெல்லாம் பதிவாகியிருக்குமே….’’

கால்கள் பரபரத்தன.

‘‘அங்க போய் அந்த ஃபுட்டேஜை வாங்கிட்டு வருவோம்.’’

‘‘கடவுளே, இந்தத் தடவையாவது எனக்கு ஒரு நல்ல வழியைக் காட்டுங்கப்பா.’’ என்று மனதிற்குள் வேண்டிக்கொண்டாள்.

பிறகுதான் உரைத்தது, அங்கே செல்வதற்கு பணம் வேண்டுமே என்று.

‘‘ஐயோ, போறதுக்கு பணம் வேணுமே.’’ கழுத்தில் கிடந்த சங்கிலியைப் பார்த்தாள். அவள் அண்ணன் அவளது பிறந்தநாளுக்குப் பரிசளித்த சங்கிலி. கண்ணீர்த் துளிகள் எட்டிப் பார்த்தன.

‘‘வேற வழியில்லை. இதக் கொண்டு போய் அடகு வைப்போம், கொஞ்ச நாள்ல மீட்டுடுவோம்’’, ஒருவாறாக மனதைத் தேற்றிக்கொண்டாள்.

வசந்த் பணிக்குக் கிளம்பிய பின், வசந்தின் தாயாரிடம் சென்றவள்,

‘‘அம்மா’’, மெதுவாக அழைத்தாள்.

‘‘என்னப்பா?’’

‘‘கோயில்ல அடிப்பிரதர்ஷனம் பண்றதா வேண்டியிருக்கேன். போய் அத முடிச்சுட்டு வர்றேன். வர கொஞ்சம் லேட் ஆகும் மா’’.

‘‘பரவாயில்ல பத்திரமா போயிட்டு வா.’’

இவ்வளவு எளிதாக அவர் அனுமதி கொடுத்தது அவளுக்கு ஆச்சரியமாக இருந்தது. வேகவேகமாக கிளம்பினாள்.

முதலில் நகை அடகு கடைக்குச் சென்று நகையை அடகு வைத்தாள். மனம் கனத்தது. ஆனால் வேறு உபாயம் தெரியவில்லை. அங்கே கொடுத்த பணத்தை வாங்கியவள், அதைப் பத்திரமாக ஒரு மஞ்சள் பையில் வைத்துக் கொ்ணடாள். பின் ஒரு ஆட்டோ பிடித்து அந்த வீதிக்குச் சென்றாள். அந்தக் கடையினுள் நுழைந்தவள், அங்கு இருந்தவரிடம் பேச ஆரம்பித்தாள்.

‘‘அண்ணா’’

‘‘என்ன வேணும்?’’

‘‘உங்கக் கடையில சிசிடிவி கேமரா இருக்குல அண்ணா?’’

அவன் சற்று எரிச்சலடைந்தான்.

‘‘அது எதுக்கு உனக்கு?’’

‘‘இல்ல, அதுல ஒரு விஷயம் பதிவாகியிருக்கான்னு பார்க்கனும். அண்ணா அது மட்டும் எடுத்துத்தந்தீங்கன்னா எனக்கு பெரிய உதவியா இருக்கும். ப்ளீஸ் அண்ணா, கொஞ்சம் பாருங்க.’’

வேண்டா வெறுப்பாக அவள் சொன்ன தேதியில் இருந்த பதிவுகளைக் காண்பித்தான். அதில் அந்த நிகழ்வும் பதிவாகியிருந்தது. அதைக் கண்டவுடன் அவளுக்கு மேலெல்லாம் நடுங்கியது.

‘‘அண்ணா! அண்ணா! அதுதான் அண்ணா, அதுதான்,’’ மகிழினிக்கு மூச்சு வாங்கியது. ‘‘அத மட்டும் ஒரு பென்டிரைவ்ல ஏத்தி தாங்கண்ணே.’’

‘‘என்னது? சும்மா உனக்கு பென்டிரைவ்ல ஏத்தி தருவாங்களா?’’ கத்தினான் அந்தக்கடைக்காரன்.

‘‘ஐயோ சாரின்னே. ஒரு பென்டிரைவ் எவ்வளோண்ணே? சொல்லுங்க.’’

பையைத் திறந்து பணத்தை எடுத்தாள்.

‘‘அடச்சீ, நிப்பாட்டு, பென்டிரைவ்க்குரிய பணத்தை மட்டும் வாங்கிட்டு ஃபுட்டேஜை கொடுக்குறதுக்கு நான் என்ன தியாகியா?’’ அவன் கேட்ட கேள்வி அவளை அதிரவைத்தது. ஒன்றும் சொல்லத் தெரியவில்லை.

‘‘ரெண்டு லட்சம் கொடுத்துட்டு வாங்கிக்க’’, சர்வசாதாரணமாகக் கேட்டான்.

அவளுக்கோ தூக்கி வாரிப்போட்டது.

‘‘ரெ…. ரெண்டு லட்சமா…’’, திக்கித் திணறினாள்.பின்,

‘‘அண்ணா, இந்த ஃபுட்டேஜ்லதான் நான் நிரபராதிங்கிறதே அடங்கியிருக்கு’’

‘‘தெரியுதில்ல, அப்ப ரெண்டு லச்சம் கொடுத்துட்டு வாங்கிக்க.’’

அவளோ அதிர்ச்சியில் சிலை போல் நின்றாள்.

‘‘சரி. எனக்கென்ன வந்துச்சு? நான் இத அழிச்சுவிட்டுப் போறேன்,’’ கணினியை அணைக்க ஆரம்பித்தான்.

மகிழினி பதறினாள்.

‘‘ஐயோ, ஐயோ, அண்ணா அப்படி எல்லாம் எதுவும் பண்ணிடாதீங்க ப்ளீஸ் அண்ணா.’’

‘‘சரி, அப்ப பணத்த எடு’’.

‘‘அவ்வளவு பணத்துக்கு நா எங்க போவேன்?’’

‘‘வள வளனு பேசாத. ரெண்டு நாள்ல ரெண்டு லட்சம் கொண்டு வந்தா தருவேன். இல்லயா, இத அழிச்சிட்டு, நீ தான் அந்த ஆள் தலையில கல்லத் தூக்கிப் போட்டு கொன்ன, நான் நேர்ல பாத்தேன்னு போய் போலீஸ்ல சொல்லுவேன். எப்படி வசதி?’’ நக்கலாகச் சிரித்தான்.

ஸ்தம்பித்துப் போனாள் மகிழினி. அவள் இதயம் ஒரு நொடி துடிக்க மறந்தது.

‘‘சரி இடத்த காலிப் பண்ணு’’ அவளைப் பிடித்துத் தள்ளினான்.

விரைந்து வந்து ஆட்டோவில் ஏறினாள்.

அழுகையை ஒருவாறு அடக்கிக் கொண்டவள்,

‘‘என்ன சுயநலம் பிடிச்ச உலகம் இது? எப்ப யாரு எங்க சிக்குவா நம்ம புகுந்து லாபம் பாக்கலான்னுட்டே எல்லாரும் நினைக்கிறாங்க. அப்பா, தேவராஜ், அருண், நவீனா, இப்போ இந்தக் கடைக்காரன் எத்தன சுயநல மிருகங்கள்? சே….., மிருகங்கள் கூட தேவைக்கு மட்டுந்தான் சாப்பிடுது. இந்த உலகத்துல நீதின்னு ஒன்னு எனக்கு கிடைக்கவே போறதில்ல’’, மனது வேதனையால் புழுங்கியது.

வசந்த் வீட்டிற்கு இரண்டு தெரு தள்ளி வண்டியை நிறுத்தச் சொன்னவள்,

பணத்தைக் கொடுத்துவிட்டு, கண்ணைத் துடைத்துக்கொண்டு வீட்டை அடைந்தாள்.

வீட்டிற்குள் நுழைந்தவுடன்,

‘‘சிநேகா, வந்துட்டியாம்மா. நீ பத்திரமா வரனும்னுதான் இவ்வளவு நேரமா வாசலையே பாத்துக்கிட்டு இருந்தேன்’’ என்றாள் அம்மா.

‘‘ஆமாம் வந்துட்டேன்மா.’’

‘‘ஏம்மா,கண் கலங்கியிருக்கு? பழசெல்லாம் ஞாபகம் வரமாட்டேங்குதேன்னு வருத்தமா இருக்கா?’’

‘‘ஆமாம் மா,’’

‘‘அதெல்லாம், ஞாபகம் வந்திடும்பா, உனக்காக நானும் கடவுள்கிட்ட வேண்டிட்டுத்தான் இருக்கேன். அதுக்கெல்லாம் வருத்தப்படாத’’ அவளை அணைத்துக் கொண்டார்.

அம்மாவின் கனிவு மகிழினியை நெகிழச் செய்தது.

20

மாலை நேரம்.

அலுவல் முடிந்து வசந்த் வீடு திரும்பினான். வீட்டிற்குள் நுழைந்தவன்,

‘‘சிநேகா, ஒரு டீ கொண்டாம்மா,’’ என்றான்.

அவளும் தேநீர் தயாரித்துக் கொண்டு வந்தாள். அதைப் பருகியவன்,

‘‘டீ சூப்பர் மகிழினி’’ என்றான். விரைத்துப் போனாள் மகிழினி பின் சுதாரித்துக் கொண்டவளாய்,

‘‘யார கூப்பிடுறீங்க?’’ என்றாள். அவள் முகம் எல்லாம் வியர்க்க ஆரம்பித்தது.

‘‘உன்னத்தான் மகிழினி உன் பேர் மகிழினிதானே?’’ என்றான் வசந்த்.

திருதிரு வென விழிக்க ஆரம்பித்தாள், மகிழினி.

‘‘என்ன முழிக்கிற? உன்ன ஹாஸ்பிட்டல்ல முதன் முதல்ல பார்த்தபோதே நீ ஏதோ ஒரு பிரச்சனையில சிக்கிக்கிட்டுத் தான் பழசெல்லாம் மறந்துடுச்சுன்னு சொல்றங்கிறது புரிஞ்சுச்சு. உன் கண்ணுல தப்பு தெரியல. ஆனா பதற்றம் தெரிஞ்சுச்சு. நீ என் கார் முன்னாடி வந்து விழுந்த அதே தேதியில் ஒரு பொண்ண அருண் கொலை கேஸ்ல அரெஸ்ட் பண்ணினதாகவும், எல்லா கான்ஸ்டபிள்சையும் கொஞ்ச நேரத்துல அனுப்பி விட்டதாகவும், அதுக்கப்புறம் அந்தப் பொண்ணுக்கு என்னாச்சுன்னே தெரியலனும் என் நம்பிக்கைக்குரிய ஏட்டு பிரதீப் சொன்னார். ஸ்டேஷன்ல இருந்து தப்பிச்சு ஓடும்போதுதான் என் கார் முன்னாடி விழுந்தங்கிறத கண்டுபிடிச்சேன். அதனால தான் என் வீட்டிலேயே உன்னைத் தங்க வைச்சு உன் பிரச்சினைய தீர்த்துவைக்கலாம்னு யோசிச்சேன். நீ வெளியில போகனும்னு சொன்னா உன்னப் போகவிடச் சொல்லி அம்மாகிட்ட நான் தான் சொன்னேன். நீ செயின் அடகு வச்சது, அந்தக் கடைக்காரன்கிட்ட ஏதோ விசாரிச்சது எல்லாத்தையுமே நான் வாட்ச் பண்ணேன். அவன்கிட்ட விசாரிச்சப்போ இந்த ஆதாரத்துக்காகத்தான் இவ்வளவு கஷ்டப்பட்டங்கிறத உணர்ந்தேன். அவன்கிட்ட இருந்து அந்த ஆதாரத்தை வாங்கிட்டு வந்துட்டேன். இதோ பென்டிரைவ்.’’

கேட்க கேட்க நடப்பதெல்லாம் கனவா இல்லை, நனவா என்றே தெரியாமல் திக்குமுக்காடிப் போனாள் மகிழினி.

‘‘நீ தற்காப்புக்காகத்தான் கல்லைத் தள்ளிவிட்டேங்கிறது தெளிவா இருக்கு. அதனால உனக்கு தண்டனை கிடைக்க வாய்ப்பில்லை. இந்த ஃபுட்டேஜோட இன்னொரு காபிய நீயே வச்சிரு. ஏன்னா உனக்கும் ஒரு பாதுகாப்பு தான். நான் எப்படிபட்டவன்னு சந்தேகப்படுவேல்ல.’’

‘‘ஐயோ! இல்ல சார்’’

‘‘முதல்லயே, என்கிட்ட இந்த மாதிரி பிரச்சினைன்னு நீ சொல்லியிருந்தைன்னா நான் எப்பவோ சுலபமா தீர்த்து வச்சிருப்பேன். நீயும் கஷ்டப்பட்டிருக்கத் தேவையேயில்ல.’’

‘‘எனக்கு போலீஸ் மேல நம்பிக்கை வைக்க பயமாயிருந்துச்சு’’.

‘‘அந்த அருண், மங்கள்ராஜ் மாதிரி ஒரு சில கரையான்கள் காவல்துறை மேல இருக்குற நம்பிக்கைய செல்லரிச்சுருதுங்க. சே…..சரி மேற்கொண்டு மிச்சத்தெல்லாம் நான் பாத்துக்குறேன். இப்போதைக்கு உன் வீட்டுக்கு தகவல் சொல்ல வேண்டாம். அவுங்க உணர்ச்சிவசப்படுவாங்க. அதனால உனக்கு சிக்கலாகலாம். இந்த கேஸ் முழுசா முடியட்டும். நானே உன்னை உன் வீட்ல கொண்டு போய் விட்டுடுறேன். நீ வேணாம்னு சொன்னாலும் பரவாயில்ல. ஃபுட்டேஜோட இன்னொரு காபி உன்கிட்டயே இருக்கட்டும். இந்தா வச்சுக்க’’.

அதை அவனிடமிருந்து வாங்கிக் கொண்டாள். வார்த்தைகள் தயங்கி வெளியே வந்தது.

‘‘எனக்கு ….எப்படி நன்றி சொல்றதுன்னே தெரியல…’’

‘‘நோ தேங்ஸ், இட்ஸ் மை டியூட்டி’’ என்றான் வசந்த்.

மலை போல் சூழ்ந்த இடைவிடா இன்னல்கள் எல்லாம் பனி போல் விலகியதை எண்ணி கடவுளுக்கு நன்றி செலுத்தினாள் மகிழினி.

21

நீதிமன்றத்தின் தீர்ப்பு ஓங்கி ஒலித்தது.

‘‘மகிழினி தன்னைத் தற்காத்துக்கொள்ளவே கல்லைத் தள்ளிவிட்டது தெள்ளத்தெளிவாக நிரூபணமாகியுள்ளதால், இந்த நீதிமன்றம் அவரை இந்த வழக்கிலிருந்து விடுவிக்கின்றது. மேலும் இவ்வழக்கு விசாரணையில் தகாத முறையில் நடந்து கொண்ட உதவி ஆய்வாளர் அருண் மற்றும் ஏட்டு மங்கள்ராஜ் ஆகியோரை பதவி நீக்கம் செய்து உத்தரவிடுகிறேன். அவர்கள் மீது வழக்கு பதிவு செய்து உரியமுறையில் விசாரிக்கவும் காவல் துறைக்கு ஆணையிடுகிறேன். இந்த வழக்கின் உண்மைத்தன்மையை நிலைநாட்டிய ஆய்வாளர் வசந்த் அவர்களைப் பாராட்டுகின்றேன். இத்துடன் இந்த வழக்கை முடித்து வைக்கின்றேன். அவை கலையலாம்.’’

சீதைக்கு மறுக்கப்பட்டது நீதி!

திரௌபதிக்கு மறுக்கப்பட்டது நீதி!

கண்ணகிக்கு மறுக்கப்பட்டது நீதி!

மகிழினிக்கு தாமதிக்கப்பட்டது நீதி!

இன்னும் பல பெண்களுக்கோ,

எட்டாக் கனியாகிப்போனது இந்த…நீதி!

மகிழினி மகிழ்ச்சியோடு நீதிபதியை வணங்கியபடி நீதிமன்றத்தை விட்டு வெளியே வந்தாள். வெளியே அவளது அண்ணன் நின்றிருந்தான்.

‘‘அண்ணா’’ என்று அழைத்தபடியே அவனை நோக்கி ஓடினாள்.

‘‘மகிழினி…..’’

இருவரும் அன்பென்னும் நதியில் நனைந்தனர்.

‘‘உன்னப் பார்த்தே எவ்வளவு நாளாச்சு. நீ எப்படி இருக்கிறேன்னு தெரியாம….’’ அதற்குமேல் அவனால் பேச முடியவில்லை.

வசந்த் அருகில் நின்றிருந்தான்.

‘‘உங்களுக்குத்தான் நன்றி சொல்லனும். கடவுள் மாதிரி நீங்கமட்டும் காப்பாத்தலைனா, என் தங்கச்சி மகிழினி என்ன ஆயிருப்பான்னு என்னால நினைச்சுக்கூடப்பார்க்க முடியல.’’ கையெடுத்துக் கும்பிட்டான்.

‘‘ஐயோ, இட்ஸ் மை டியூட்டி. நான் என் கடமையைத்தான் செஞ்சேன். உங்க அப்பா ரொம்ப திட்டுவார்னு சொன்னா. ஏதும் பிரச்சினையாகுமா?’’.

‘‘இவள வீட்டுக்கு கூட்டிட்டுப் போனா பிரச்சினை பண்ணுவார். படிப்பு முடியுற வரைக்கும் காலேஜ் ஹாஸ்டல்லயே விடலாம்னு பாத்தேன். அவ +2ல நல்ல மார்க் எடுத்தனால ஹாஸ்டல் ஃப்ரீ. அதனால பிரச்சினையில்ல.’’

‘‘ஓ! அப்புறம்… ஆல் த பெஸ்ட் மகிழினி, இந்த மாதிரி எப்பவுமே தைரியமா எல்ல சூழ்நிலைகளையும் சந்திக்கனும். எப்ப, என்ன உதவினாலும் கேளு. வாழ்த்துக்கள்.’’

‘‘தேங்க் யூ சார்’’.

அனைவரது மகிழ்ச்சியும் இணைந்து இனிமை பரவியது.

இனி ஒரு விதி செய்வோம்!

பெண்களை நாட்டின் கண்களாகப் போற்றுவோம்!